# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, வைகாசி 8உ (21-5-72) ஹிஜ்றா 1391 ரபி ஆகி 7 புத்தகம் 25 இதழ் 26


## உள்ளூராட்சி மன்றங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்கட்டும்

புதிய அரசியல் திட்டம் பிரகடனப்படுத்தப்படும் மே 22ம் நாள் தமிழ் ஈழத்திலுள்ள கிராமசபைகள் நகரசபைகள், பட்டின சபைகள், மாநகர சபைகள் அனைத்தும் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு புதிய அரசியல் திட்டத்துக்கு தமது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்!!

—இவ்வாறு தமிழர் கூட்டணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

# மே 22 - குடியரசுநாளில் தமிழ் ஈழமெங்கும் ஹர்த்தால், கறுப்புக்கொடி!

## பாடசாலைகளை மூன்று நாட்களுக்கு பகிஷ்கரிக்குமாறு கோரிக்கை!!

### பரிபூரண துக்கதினமாக அனுட்டிக்கும்படி தமிழர் கூட்டணி வேண்டுகோள்!



**உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் பதவியை உதறித்தள்ளினூர்!**

-பரீட்சைத் திணைக்களத்தில் பட்டதாரி மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றி வந்த உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள், புதிய அரசியல் திட்டத்தின்கீழ் விசுவாசப்பிரமாணம் எடுக்க மறுத்து தமது பதவியை உதறித்தள்ளி ஒரு புதிய தியாக வரலாற்றை உருவாக்கியுள்ளார். (அவரது விலகல் கடிதத்தை 2ம் பக்கத்தில் காணலாம்.)

**14-5-72 அன்று திருக்கோணமலையில் கூடிய தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு இலங்கையின் புதிய அரசியல் சட்டம் பிரகடனப்படுத்தப்படும் நாளான 22-5-72 அன்று தமிழ் ஈழம் முழுவதிலும் ஒரு நாள் பூரண துக்கதினம் அனுட்டிக்கும்படி தமிழ்பேசும் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

**துக்க தினத்தைப் பின்வரும் முறையில் அனுட்டிக்கவேண்டுமென்று தமிழர் கூட்டணி ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக்கொள்ளுகின்றது:-**

1. 22-5-72 அன்று தமிழ் பேசும் மக்கள் குடியரசு தினத்தையொட்டிய அரசாங்க வைபவங்கள் எதிலும் கலந்து கொள்ளாது அவற்றை முற்ருகப் பகிஷ்கரிக்கவேண்டும்.
2. அன்றைய தினம் தங்கள் வீடுகளை விட்டு வெளியே செல்லாது தத்தம் வீடுகளிலிருந்து பிரார்த்தனைகளில் ஈடுபடவேண்டும்!
3. இல்லங்கள் தோறும் கடைகள் தோறும் கறுப்புக் கொடிகளைப்பறக்கவிடவேண்டும்!
4. வியாபார ஸ்தாபனங்கள் படமாளிகைகள் ஆகியவற்றை மூடிவைத்து துக்கம் அனுட்டிக்கவேண்டும்.
5. வழக்கறிஞர்கள் இத்தினத்தில் நீதிமன்றங்களைப் பகிஷ்கரிக்கவேண்டும்.
6. இத்தினத்தில் தனியார்துறை நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் வேலைக்குப்போகாது விடவேண்டும். (இன்றுள்ள அரசியல் சட்டத்தின் படி அரசாங்க ஊழியர்கள் இத்தினத்தில் தமது அலுவலகத்துக்குச் செல்லுவதை இவ்வேண்டுகோள் கட்டுப்படுத்தப்பட மாட்டாது.)
7. 22ந்திகதி தொடக்கம் மூன்று நாட்களுக்கு மாணவ மாணவிகள் பாடசாலைகளுக்கு போகாது அவற்றை பகிஷ்கரிக்க வேண்டும்.
8. புதிய அரசியல் திட்டத்தை நிராகரித்து 24ந் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழர் கூட்டணி சார்பில் நடத்தப்படும் பகிரங்கப் பொதுக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கில் கலந்து கொள்ளவேண்டும்.

## கல்வியமைச்சருக்குக் கறுப்புக் கொடிகள்! சுவரெங்கும் எதிர்ப்புச் சுலோகங்கள்

யாழ்ப்பாணத்துக்கு சென்றிருந்த கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களுக்கு மாணவர்கள் கறுப்புக் கொடி வரவேற்புகள் அளித்ததாகவும், பல கல்லூரிகளில் அமைச்சரை பகிஷ்கரித்து மாணவர்கள் வெளிநடப்பு செய்ததாகவும் இதனுல் வெறுங் கதிரைகளுக்கே அமைச்சர் உபதேசம் செய்ய வேண்டி ஏற்பட்டதென்றும் சுதந்திரனுக்கு கிடைத்த தகவல்களின் படி தெரியவருகிறது.

ஒரு நாளைக்கு என்ருலும் அவசரகாலச் சட்ட விதிகளை நீக்கிவிட்டு கல்வியமைச்சர் என்ற முறையில் உங்களால் வட பகுதிக்கு வரமுடியுமா என்று பதியுதீனை நோக்கி நாவலர் அமிர்தலிங்கம் சவால் விட்டிருந்தாரல்லவா? அந்தச் சவாலை ஏற்பதற்கு தெம்பின்றி அவசரகாலச் சட்டவிதிகளின் பரிபூரண பாதுகாப்புடன் கல்வியமைச்சர் யாழ்ப்பாணம் சென்று வீராதி வீரர் போல பேசி விட்டுத் திரும்பியிருக்கிருர்.

கல்வியமைச்சர் யாழ்ப்பாணம் செல்லுமுன், அமைச்சருக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டுவோர், எதிர்ப்புச் சுலோகங்கள் எழுதுவோர், துண்டுப் பிரசுரம் வெளியிடுவோர், எதிர்ப்புச் சுலோகங்கள் கோஷிப்போர் கைது செய்யப்படுவரென்று வட பகுதி பொலிஸ் அதிபர் திரும்பத் திரும்பப் பயமுறுத்தியதும், அமைச்சருடன் கூடவே அவருக்கு பாது

(7-ம் பக்கம் பார்க்க)



## கல்வியமைச்சரை கிழக்கிலும் எதிர்ப்போம்

### அறப்போரணித்தலைவர் சூளுரை!

"கல்வியமைச்சர் கிழக்கு மாகாணத்துக்கு வருகை புரிவாராஞல், அங்கும் அவரைப் பகிஷ்கரிப்போம்."

—இவ்வாறு அறப்போரணித் தலைவர் திரு. ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம் சுதந்திரனுக்கு விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

"தமிழரசுக்கட்சி, எந்த ஒரு அமைச்சரையும் தமிழ் ஈழத்தில் வரவேற்பதில்லை என்றும், அமைச்சரது விஜயங்களை பகிஷ்கரிப்பதென்றும் முடிவுசெய்துள்ளது. அந்தத்தீர்மானத்தின் அடிப்படையில், கல்வியமைச்சர் மட்டுமல்ல- எந்த அமைச்சர் கிழக்கே வந்தாலும் அவரைத் தமிழரசுக்கட்சி பகிஷ்கரிக்கும்.

"அதுவும் தமிழினத்துக்கு கொள்ளி வைக்கும் புதிய அரசியல் சட்டம் வந்துவிட்டபின், எதிர்காலத்தில் தமிழ்ப்பகுதியில் அமைச்சர்களுக்கு வரவேற்பளிக்குமளவுக்கு, மீன்பாடும் தேனுட்டு மக்களின் தன்மானம் அழிந்து போய் விடவில்லை- தந்தைசெல்வா காட்டும் வழியிலேயே கிழக்கிலங்கை மக்கள் கண்ணை மூடிக்கொண்டு செல்ல என்றும் தயாராக இருக்கிறார்கள்"

—இவ்வாறு அவர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வெருட்டுகளுக்கு அஞ்சுவோர் தமிழர்களல்ல—

### மஜீத்துக்கு செல்லத்தம்பு சாட்டை!

"மூதூர் நாடாளுமன்ற உறுப்பினரும் அரை அமைச்சருமான ஜனுப் மஜீத் சுற்றிவரப் பொலிஸ் பாதுகாப்புகளுடன் யாழ்ப்பாணத்தில் நின்று தமிழ் மக்களையும் தமிழரசுக் கட்சியையும் பயமுறுத்திப் பார்க்கிருர். இவரது வெள்

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தை அடிமைப்படுத்தும் சட்டத்துக்கு விசுவாசப்பிரமாணம் எடுக்க மாட்டேன்!

## உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன் பதவியை உதறித் தள்ளினர்!

**ஐந்து ஆண்டுகள் பட்டதாரி மொழிபெயர்ப்பாளராய் கடமை யாற்றிவரும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் புதிய குடியரசு அரசியல் அமைப்பை எதிர்த்து அரசாங்க சேவையில் இருந்து தனது பதவியை ராஜினுமா செய்துள்ளார். அவரது பதவி விலகல் கடிதம் இது.**

இணைந்த சேவைகளின் அதிபர்,
பரீட்சை ஆணையாளர் ஊடாக,
கொழும்பு-2.

ஐயா,

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஓர் அரசாங்க ஊழியனுய் இருந்து வரும் நான் முதல் குடியரசு தினமான 22-5-1972இல் இலங்கை வாழ் தமிழ் இனத்தை முழு அடிமை இனமாக மாற்றும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் விசுவாசப் பிரமாணம் எடுக்கக்கூடாது என்ற திடமான முடிவுடன் எனது இந்த ராஜினுமாக் கடிதத்தை தங்களுக்கு அனுப்பிவைக்கிறேன்.

இலங்கையில் வாழும் தமிழ் அரசாங்க ஊழியன் ஒவ்வொருவனும் புதிய குடியரசு தினத்தன்று விசுவாசப் பிரமாணம் எடுக்கும்போது 'வேறு வழியில்லை' என்ற நிலையில்தான் அதனைச் செய்வானே தவிர மனவிருப்போடு அக்காரியத்தைச் செய்யமாட்டான். பற்களைக் கடித்துக்கொண்டு நெற்றியைச் சுருக்கிக்கொண்டு தான் அவன் விசுவாசப் பிரமாணத்தைப்படிப்பான்.

குடியரசு நாளுக்கு முன்பு தமிழ் அரசாங்க ஊழியர்களிடையே ஒரு ரகசிய வாக்கெடுப்பை அரசாங்கம் நடாத்திப்பார்த்தால் 'புதிய குடியரசு அரசியல் அமைப்பு சட்டத்தை ஏற்று விசுவாசப்பிரமாணம்செய்ய எமக்கு விருப்பமில்லை' என்ற கருத்தை தமிழ் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் ஏக மனதாகத் தெரிவிப்பதை அரசு காணக்கூடியதாய் இருக்கும்.

வீடும் குடும்பமும் கண்களின் முன் தோன்ற—வேலையும் சம்பளமும் போய்விடுமே என்ற கலக்கத்தோடு—வேண்டாவெறுப்பு நிலையில் தான் விசுவாசப் பிரமாணத்தை தமிழ் அரசாங்க ஊழியர்கள் எடுக்கப்போகிறர்களே தவிர புதிய அடக்குமுறை அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டல்ல என்பதை அரசாங்கம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

நான் இலங்கை வாழ் தமிழ் அரசாங்க ஊழியர்கள் பல்லாயிரவர் சார்பில் அவர்களது மனநிலையை அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டவும், உலகத்திற்கு வெளிப்படுத்தவும் புதிய குடியரசு தினத்தில் விசுவாசப் பிரமாணம் எடுக்காது விடும்பொருட்டு எனது பட்டதாரி மொழிபெயர்ப்பாளர் பதவியை ராஜினுமாச் செய்கின்றேன்.

இது ஒரு சமுதாயத்தின் மானப் பிரச்சினை மட்டுமல்ல—இது ஒரு சமுதாயத்தின் வாழ்வு பற்றிய பிரச்சினை. ஈழத்தின் மிகப் பழம்பெரும் தேசிய இனமான தமிழினத்தின் அழிவுக்கு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் அத்திவாரமாய் அமைகிறது. புதிய அரசியல் அமைப்புச் சட்டம் இலங்கையில் உள்ள சிறுபான்மை இனத்தவர் மேல் பெரும்பான்மை இனத்தவர் முடியரசு செலுத்த வழிவகுக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் அழிவில் இருந்து தமிழ் இனத்தைக் காப்பாற்றும் ஒரு பெரும் கடமை அலுவலகத்துக்கு வெளியே இருப்பதாக இச்சந்தர்ப்பத்தில் நான் உணருகிறேன்.

தமிழினத்தை அடிமைப்படுத்தும் புதிய குடியரசு அரசாங்கத்தில் உயர்ந்த சம்பளம் பெறும் பெரிய பதவி ஒன்றை வகிப்பதைவிட தெருவிலே ஓர் ஏழையாய் நின்று தமிழரின் விடுதலைக்காக நடைபெறும் அறவழியிலான உரிமைப் போரில் பங்கு கொள்வதையே நான் பாக்கியமாகக் கருதுகிறேன்.

நான் பரம்பரைப் பணக்காரன் அல்ல—சேகரித்து வைத்த பணமும் என்னிடம் கிடையாது. ஓய்வு ஊதியமும் நான் பெறப்போவதில்லை. பத்து விரல்களை மட்டும் கொண்ட வெறும் கைகளோடு நான் அலுவலகத்திலிருந்து வெளியேறுகிறேன்.

குடியரசு அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதிய பெரிய மனிதர்களுக்கு அவர்களது சிங்கள சமுதாயத்தில் எவ்வளவு பற்று உண்டோ என்னைப் போன்ற சாதாரண மானவர்களுக்கும் எங்களுடைய தமிழ் சமுதாயத்தில் அவ்வளவு பற்று உண்டு.

# தமிழ்த் துரோகிகளை ஓட ஓட தமிழினம் விரட்டியடிக்க வேண்டும்!

## இதுவே தமிழர்களின் முதற் கடமை!

புதிய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு நாள் குறிக்கப்பட்டு விட்டது. அதுதான் மே 22. இந்நாட்டுத் தமிழ் பேசுமினத்தின் உரிமைகளை ஆழக் குழிதோண்டிப் புதைத்து கடைசி மண்ணையும் போடும் நாள். இந்தத்திட்டம் எமது உரிமைகளை தரவில்லை என்பதை நன்முக அறிந்த பின்னரும்கூட, இதைத் தொடர்ந்து ஆதரித்துக் கையெழுத்துப் போடத் துடிக்கிருர்கள் சில தமிழ்த் துரோகிகள். அவர்கள் தான் வடக்கிலிருந்து வந்த பனித் தியாகராசாவும், திமோல் அருளம்பலமும், மனச்சாட்சிமாட்டினும்,எம் சி. சுப்பிரமணியமும் ஆவர். இவர்களுக்கு நாம் பின்வாங்குவதா என்று கேட்டுக்கொண்டு முன்வருகிருர்கள் பட்டிருப்புத் தம்பிராசாவும், மட்டக்களப்பு இரண்டாவது பிரதிநிதியும்.

புதிய குடியரசு அரசியல் அமைப்பில் அவர்கள் கொடுக்கின்ற தமிழ் மொழி விசேட விதிகள் சட்டம் ஒரு நடைமுறைச் சட்டமாகவே இருக்கும். இச்சட்டம் குடியரசுச் சட்டத்தில் சேர்க்கப்படவில்லை. தேசிய அரசப் பேரவை விரும்பினுல் இச்சட்டத்தை நீக்கி விடலாம் என்று அரசியல் அமைப்புச் செயல்கள் அமைச்சர் திட்டவட்டமாகக் கூறிய பின்னரும், கூட நாம் ஆதரிப்போம் என்று கூறும் இவர்களை என்ன செய்வது? இந்த உரிமைகள் போதியன அல்ல. தமிழர்கள் ஏற்கமாட்டார்கள். என்றுலும் காலப்போக்கில் முன்னேற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் தாம் ஆதரிப்பதாக மனச்சாட்சி மாட்டின் கூறுகிருர். ஆனல் 1947ல் இருந்து இந்நாட்டில் தமிழரின் வரலாற்றை உற்று நோக்கும் எவரும், மாட்டின் எதிர்பார்க்கும் மாறுதல்கள் வரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. போதிய உரிமைகளைத் தரவில்லை என்ற பின்னரும்கூட ஆதரிப்பதாகக் கூறும் மாட்டினை என்ன செய்வது?

எனவே வடக்கிலுள்ள நால்வரும் கிழக்கிலுள்ள இருவருமாக மொத்தம் அறுவர் நிச்சயமாக அரசியல் திட்டத்தை ஆதரித்துக் கையெழுத்துப் போட்டுத் தமிழினத்துக்கு அள்ளி வைக்கப் போகிருர்கள் என்பது நிச்சயம். தமிழினத்தின் சாபக்கேடோ என்னவோ, காலத்துக்குக் காலம் தமிழினத்தின் கழுத்தை அறுக்க இவ்வாருன துரோகிகள் எட்டப்பன் முதற்கொண்டு தோன்றிக் கொண்டுதான் இருக்கிருர்கள்.

கடந்த வாரம் தமிழ் காங்கிரசிலிருந்து விரட்டப்பட்ட பனித் தியாகராசா தான் எல்லோருக்கும் மேலாக சென்று புதிய குடியரசுத் திட்டம் தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று கூறுகிருர். தொடர்ந்தும் வட்டுக்கோட்டை மக்கள் தம்மையே பாராளுமன்றம் அனுப்பி வைப்பார்கள் என்று கூடப் பேசுகிருர். இதற்கு வட்டுக்கோட்டை மக்களின் பதில் என்ன?

தனது பா. உ. பதவியை ராஜினுமாச் செய்யும்படி கேட்கும் உரிமை வட்டூர் மக்களைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிருர். வட்டுக்கோட்டைத் தொகுதியிலே, எம். பி.யின் சொந்த ஊரான காரைநகரிலுள்ள இரு கிராம சபைகளும் கையெழுத்து வைக்கக் கூடாதென தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளன. ஆனல் ஏனைய உள்ளூராட்சிச் சபைகளான சங்கானைப் பட்டின சபை வட்டுக்கோட்டைக் கிராமசபை சுளிபுரம் கிராமசபை, பண்டத்தரிப்பு பட்டினசபை, அராலிக் கிராம சபை என்பன இன்னும் தங்கள் கும்பகருணத் தூக்கத்திலிருந்து விழித்தெழவில்லைப் போலும்.

இவர் அராலியிலும் ஏனைய இடங்களிலும் நடத்திய அரசியலமைப்பு ஆதரவுக் கூட்டங்களை மக்கள் பகிஷ்கரித்து விட்டனர். இவருடைய போக்கை மக்கள் ஆதரிக்கவில்லை என்பதற்கு இதைவிட வேறு என்ன செய்ய வேண்டும். தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டுப் பெற்ற பா. உ. பதவியை விட்டு விலக வேண்டுமென த. கா. கட்சியும் கேட்டுள்ளது. மக்களும் இயலுமான அளவுக்குத் தங்கள் எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். இவற்றையெல்லாம் பார்த்தும் பாராதவர் போல, பனி அதிகமாகப் பிடித்து, மூளை கலங்கி, வட்டுக்கோட்டை மக்கள் தம்மையேதொடர்ந்தும், பாராளுமன்றம் அனுப்பி வைப்பர் என்று கூறும் தியாகராசா அவர்களே, உங்களுக்குத் துணிவிருந்தால், தொகுதி மக்கள் உம்மை மீண்டும் மீண்டும் அனுப்புவார்கள் என்று உண்மையான நம்பிக்கையிருந்தால், மக்கள் எதிர்ப்புக் காட்டிய பின்பும் கூட ராஜினுமாச் செய்ய ஏன் தயங்குகிறீர்.

இவ்வளவு நாளும் மக்களை மறந்து மந்திரிகளுக்கு வால் பிடித்து, குடைபிடித்து, மாலைபோட்டு மரியாதை செய்து திரிந்த நீர், நாள் கிட்டகிட்ட உமது தொகுதி மக்களும் உமது துரோகச் செயலுக்கு உடந்தையானவர்கள்தான் என்று காட்டுவதற்காகப் படாதபாடு படுகிறீர். தொகுதி மக்களையும் சேர்த்துப் பேசுகிறீர். தொகுதி மக்கள் என்ருே உம்மை விட்டு விலகி விட்டார்கள். உமது சொந்த நன்மைக்காகத்தான் புதிய திட்டத்துக்கு ஆதரவு கொடுக்கிறீர் என்பது எல்லாருக்கும் தெரிந்த விடயம். எனவே தொகுதி மக்களையும் உம்முடன் சேர்த்து, அவர்களும் என் கருத்துக்களை ஆதரிக்கிருர்கள் என்று அறிக்கை விடாதீர்கள்.

உம்மால் பதவியுயர்வு பெற்ற ஆசிரியர்களும், தராதரப்பத்திரமற்ற ஆசிரியர் வேலைபெற்றவர்களும், உம்மை ஆதரிக்கலாம். அதற்காக தொகுதி முழுவதுமே ஆதரிப்பதாக எப்படிச் சொல்லமுடியும். வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் அவ்வளவுக்கு ஏமாளிகளல்ல.

இவ்வளவு துரோகம் செய்யும எம். பி. மாரையும் தமிழ் மண்ணில் சுதந்திரமாக நடமாட விடும் தமிழ் மக்களின் நிலையை என்னென்று சொல்வது? எதிரியையும் மன்னிக்கும் தாராள மனப்பான்மையா? அல்லது கையாலாகாத்தனமா? தமிழினம் கறுப்புக்கொடி காட்டவேண்டியது மந்திரிகளுக்கல்ல. எம்மிடையே இருக்கும் தமிழ்த்துரோகிகளுக்குத்தான். அவர்களை முற்றுக பகிஷ்கரிக்க வேண்டும். கையெழுத்து வைக்கும் உறுப்பினர்களை மீண்டும் நம் தொகுதிக்கு வராதவாறு மக்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் கொழும்பிலேயே இருந்து கொள்ளட்டும்.

தமிழ்ப்பித்தன்

### கரிநாள்

வாழும் தமிழர்க்கு வாழ்வின் வழியடைத்து
• தோழர்கள் ஆட்சி தொடர்கிறது—தொல்லைதரும்
மக்கள் குடியரசு மலரும்நாள் மாத்தமிழ்
மக்கள் கரிநாள் அறி.

கூலிக்கு மாரடிக்கும் குப்பைத் தமிழ்த் தலைகள்
வேலிக்கு ஓணன் சாட்சிபோல்—தலையசைத்து(க்)
கையெழுத்திட்டாலும் கண்டபலன் ஒன்றுமில்லை
கரிநாள் கரிநாள் அது.

வேறு

• தன்னுட்சிகண்டு தனியரசு ஆண்ட இனம்
இன்னுட்டில் ஏங்கி இடர்படவோ?—இன்றுடனே
போர்க்கோலம் கொள்வோம் புதைத்திடுவோம் *புத்தடிமை
நாமார்க்கும் குடியல்லோம் காண்.

(* புத்தடிமை-ஆங்கில அடிமை போய் வரும் சிங்கள அடிமை)

—காரை - மணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியரசு நாள் - தமிழர் குடியழிக்கும் நாள்!

அன்பு நண்பா,

வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் புதிய எழுச்சி பிறந்துவிட்டது; விசையொடிந்த கைகளிலே புதிய வேகம் பிறந்துவிட்டது! பூட்டியிருக்கும் அடிமைத் தளையை பொடிப் பொடியாக்கிட — புதிய அரசியல் திட்டத்தை எதிர்த்து போரிட — இழந்துவிட்ட விடுதலையை மீண்டும் நிலைநாட்டி இன்பத் தமிழகத்தை சமைத்திட ஈழத் தமிழினம் ஒன்றுபட்டு உறுதியாக முடிவு எடுத்துவிட்டது; தோள்தட்டி மார்தட்டி போர்க்களம் கண்டிடப் புறப்பட்டுவிட்டது; ஈழத்தமிழன் யாருக்கும் அடிமையாகான் என்பதை அகில உலகமும் அறியும்படி செயலில் காட்டிட வேண்டிய தருணம் வந்துவிட்டது; என்பதனை ஈழத்தமிழ்நாட்டின் தலைநகராம் திருகோண

## அரசியல் மேடை

மலையில் இத்திங்கள் பதினான்காம் நாள் கூடிய தமிழர் மாநாடு திட்டவட்டமாகப் பிரகடனப்படுத்திவிட்டது!

ஆம் நண்பா, இயற்கை வனப்பும், எழில் மிகு காட்சிகளும், கோயிலும், சுனையும் குமுறும் கடலும் கொண்ட கோணமாமலை, தமிழர்களின் வரலாற்றுச் சிறப்பும் பெருமையும் கொண்ட பழந் தமிழர் நாடு என்பதனை நீ அறியாய்! ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தாண்ட மாமன்னன் இராவண்ணன் ஆண்டிருந்த பூமி அது! திருஞானசம்பந்தரும், அருணகிரியும் அழகு தமிழில் அள்ளி அள்ளி பாமாலை பாடிய பதி அது! இப்படிப்பட்ட பழம் பெருமை மட்டுமல்ல நண்பா! ஈழத்தமிழினத்தின் இன்றைய காலகட்டத்தில் நடைபெற்று வரும் அரசியல் வரலாற்றுத்திருப்பங்களெல்லாவற்றுக்கும் தாய் வீடாக திருமலையே இருந்து வருகிறது!

1956ம் ஆண்டு, சிங்களம் மட்டும் சட்டத்தையடுத்து, இந்நாட்டுத் தமிழர்கள், அலைகடலோ, ஆர்ப்பரிக்கும் பெரும் படையோ என கால் நடையாக யாத்திரை செய்து இலட்சக் கணக்கில் திரண்டு தங்கள் விடுதலைப்போராட்டத்தைப் பிரகடனப் படுத்தியது திருகோணமலையில்தான்! ஆம், வரலாற்றுப் பெருமைமிக்க 'திருமலை மாநாட்டை' மறந்திருக்கமாட்டாயே!

மொழிப் போராட்டத்தில் குண்டடிபட்டு முத்தமிழுக்காக உயிர்நீத்த வீர இளைஞன் நடராசனைப் பெற்றெடுத்த தியாக மண்ணும் திருகோணமலைதான்!

இத்தகைய தீந்தமிழர் கோட்டமாம் திருகோணமலை, புதிய அரசியல் திட்டத்துக்கு எதிரான தமிழினத்தின் ஒருமுகப் படுத்தப்பட்ட எதிர்ப்பை ஒன்றிணைத்துக் காட்டியதன் மூலம் வரலாற்றில் மீண்டும் ஓர் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டது. பல்வேறு முகாம்களில் நின்ற தமிழ் இனத் தவரை, ஒரே விடுதலைப் பாசறைக்குள் இழுத்து தமிழர் கூட்டணியை உருவாக்கும் ஒரு களமாக திருகோணமலை அமைந்துவிட்டது தமிழினத்தின் பாக்கியமே என்பதில் தடையில்லை!

ஈழத் தமிழினத்தின் ஒரே தலைவரான பெரியவர் தந்தை செல்வாவின் தலைமையிலே, தமிழர் கூட்டணி உருவாகிவிட்டது! தமிழ் இனத்தின் தனிப்பெரும் விடுதலைப் பாசறையான தமிழரசுக்கட்சியும் தமிழ் காங்கிரசும், மலையகத் தமிழ் தொழிலாளர்களின் பேரியக்கமான இலங்கை தொழிலாளர் காங்கிரசும் ஒரே குரலில் — ஒரே கூட்டணியில் இணைந்து புதிய அரசியல் திட்டத்துக்கு எதிரான போராட்டத்தை நடத்த விரும்புவது, எதிரிகளை கதிகலங்க அடித்திடும்; தமிழ் மகன் ஒவ்வொருவனுக்கும் புத்துணர்வையும் புதிய வேகத்தையும் தந்திடும் என்பதை நான் அறிவேன்!

புதிய அரசியல் திட்டத்துக்கான வரைவு அடிப்படைத் தீர்மானங்கள் முதன் முதலாக டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவினால் ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்னர் வெளியிடப்பட்ட போதே, அவற்றை அலசி ஆராய்ந்து, அவற்றின் அடிப்படையில் எழுதப்படும் புதிய அரசியல் சாசனம் தமிழினத்தின் மரணவோலையாகவே அமைந்திடும்; இதை எதிர்த்திட ஈழத்தமிழினம் முழுவதும் ஓரணியில் திரண்டிடவேண்டும் என்கின்ற கருத்தை மிகவும் வேகமாகவும் உறுதியுடனும் வலியுறுத்தியவன் — புதிய அரசியல் திட்டத்திற்கு எதிராக மக்களின் ஒன்றுபட்ட சக்தியை உருவாக்க தயவு தாட்சண்யமின்றி துணிச்சலுடன் வாதாடி வந்தவன் — என்கின்ற முறையிலே தமிழர் கூட்டணி அமைந்ததுகண்டு நான் மிகவும் புளகாங்கிதம் அடைகிறேன்!

என்னுடைய கருத்துக்களும் என்னுடைய எழுத்துக்களும் அவம் போகாமல், புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக மக்களின் சக்தியை ஒன்று திரட்டுவதில் பயன்பட்டிருப்பது கண்டு இதயம் பூரிக்கிறேன்! அரசியல் சட்டத்தை எதிர்த்திடுவதற்காக தமிழர் கூட்டணியை உருவாக்குவதற்கு எறும்புபோல உழைத்த வல்வெட்டித்துறை அன்பர் ஞானமூர்த்தியை ஈழத்தமிழினம் எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

இதற்குமுன்னர் எத்தனையோ ஒற்றுமை முயற்சிகள் நடைபெற்று வந்திருக்கின்றன; அவையெல்லாம் தோல்வியடைந்திருக்கின்றன. அதற்கு காரணம் அந்த ஒற்றுமை முயற்சிகள் சுயநலத்தின் அடிப்படையில் பொதுத்தேர்தலை மனதில் கொண்டு, நடைபெற்றதுதான். அத்தகைய சுயநல ஒற்றுமை முன்னணிகளை நாம் கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறோம்!

ஆனால் இப்பொழுது தமிழர் கட்சிகளுக்கிடையே ஏற்பட்டிருக்கின்ற ஒற்றுமைதான் உண்மையான

## எங்கும் கருங்கொடிகள் உயர்த்திடுவோம் எம் தமிழர் கொதிப்பதனை எதிரொலித்திடுவோம்!!

ஒற்றுமை. சுயநலம் சிறிதுமில்லாது இன, மொழி நலனைகருதி ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை. இத்தகைய ஒற்றுமையைக் கண்டு பூரிக்காதவன் தமிழனாக இருக்கமுடியாது!

நண்பா, புதிய அரசியல் திட்டத்தை எதிர்த்திடுவதிலே ஒன்றுபட்டிருக்கின்ற தமிழினத்தின் கட்சிகள், இன விடுதலைக்குப் போராடி தமிழினத்துக்கு தனிவாழ்வு சமைத்திடுவதையே இறுதி இலட்சியமாகக்கொண்டு இயங்கும் காலமும் அதிக தூரத்தில் இல்லை என்பதனை தமிழ் காங்கிரசை சேர்ந்த சிலர் திருகோணமலையிலே சூசகமாக தெரிவித்தது கண்டு மெத்தவும் மகிழ்ச்சியடைந்தேன்.

ஒற்றையாட்சியின்கீழ் ஐக்கிய இலங்கை என்னும் கொள்கை தோற்றுவிட்டதை தமிழ் காங்கிரஸ் நண்பர்கள் உணர்ந்து பகிரங்கமாக அதை அறிவித்திருப்பது தமிழினத்தின் நிலையான ஒற்றுமைக்கு பச்சை விளக்காக எனக்குத் தோற்றுகிறது!

தமிழினம் சென்றடைய வேண்டிய இலக்கு எது என்பதிலே இன்று தமிழ் மக்களுக்கு கொஞ்சம்கூட ஐயப்பாடு கிடையாது; அபிப்பிராயபேதம் கிடையாது! இந்த அடிப்படைக் குறிக்கோளில் அனைவர்க்கும் தெளிவு ஏற்பட்டுவிட்டால் பின்னர் நமக்குள்ளே பேதங்களுக்கும் பிளவுகளுக்கும் துளியும் இடமேற்படமுடியாது! பாதையை செப்பமாக வகுத்துக்கொண்டு பயணத்தை தொடர வேண்டியதுதான்! இந்தப் பணியை தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு சீராக செய்துமுடிக்கும் என்று நம்புகிறேன்!

திருகோணமலையிலே கூடிய தமிழர் கூட்டணி மாநாட்டிலே தந்தை செல்வா அவர்களின் தலைமையிலே, மலையக தமிழர்களின் பேரியக்கமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி அவர்கள், புதிய அரசியல் திட்டத்தை முற்றாக நிராகரித்திடும் தீர்மானத்தை முன்மொழிந்திட தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம் வழிமொழிந்திட, மக்களின் பலத்த கையொலிக்கிடையே ஒரே மனதாக நிறைவேற்றப் பட்ட காட்சி இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் வாழ்வில் மறக்கமுடியாத காட்சியாகும்—தமிழ் இனத்தின் எதிரிகளது இதயங்களிலே வேல் கொண்டு பாய்ச்சிடுவதுபோன்றதோர் நிகழ்ச்சியாகும்!

ஈழத்தமிழினத்தின் குடியுரிமை மொழியுரிமை, கல்வியுரிமை மத உரிமை போன்ற அனைத்து உரிமைகளையும் பறித்து அடிமைப் படுகுழியில் தள்ளி அழித்தொழித்திடும் புதிய ஒற்றையாட்சி சிங்கள பௌத்த அரசியல் சட்டம் நிறைவேற்றப்படும் நாளான மே 22ம் நாள், ஈழத்தமிழினத்தின் கரிநாள், துக்கநாள், துயரநாள் என்பதை சூடு சுரணை ரோசம் மானமுள்ள எந்தத் தமிழனும் மறுக்க மாட்டான்.

சிங்கள இனம் தனது சுதந்திரங்களையும் உரிமைகளையும் நிலைநாட்டிடும் புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும் குடியரசு நாளில் தமது நாட்டில் விழாக்கள் எடுத்து மகிழ்ச்சியில் வேண்டுமானால் திளைக்கட்டும்! ஆனால் தமிழ் மகன் ஒருவன் கூட குடியரசு விழாக்கொண்டாட்டங்களில் பங்கேற்காது அவற்றைப் பகிஷ்கரிக்கவேண்டும் !

புதிய அரசியல் திட்டம் நடை முறைக்கு வரும் நாள்—ஈழத்தமிழ் தேசிய இனத்தின் தூக்குக்கயிறு உருவாக்கப்படும் துயர் தோய்ந்தநாள். அந்நாளில் நமக்கு எதுவித குதூகலமோ, கொண்டாட்டமோ, கேளிக்கைகளோ, எதுவுமே வேண்டாம்! ஈழத்தமிழகமெங்கும் சோகமும்—அமைதியும் நிறைந்து இழவு வீடாக காட்சி தரட்டும்!!

மே 22- ஈழத்தமிழினத்திற்கு நிச்சயம் ஒரு இழவு வீடுதான்! தமிழினம் தனது சுதந்திரங்களையும் உரிமைகளையும் அடியோடு இழக்கும் நாள்! அந்நாளில் நமக்கென்ன மகிழ்ச்சி? நமக்கென்ன கொண்டாட்டம்?

ஈழத்தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொருவர் இல்லங்களிலும்— ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலும், கடைகளிலும் கார்களிலும், சைக்கிள்களிலும் அன்றைய தினம் கருங்கொடிகள் பறக்கட்டும்! தமிழன் ஒவ்வொருவனும் அன்று கருஞ்சட்டையோ, கறுப்பு நிற பேட்ஜுகளோ அணியவேண்டும்! தனிநபர் ஒருவர்—தாமோ, தமது இல்லத்திலோ கடையினிலோ கறுப்பு நிற சட்டை போடுவதையோ, கறுப்புக்கொடிகளை பறக்க விடுவதையோ ஏனென்று கேட்டிட, தடை செய்திட, அரசின் ஏவலாளர்களான பொலிசாருக்கோ இராணுவத்தினருக்கோ துளியும் அருகதை கிடையாது!

மே 22ல் தமிழ் ஈழமெங்கணும் உயர்த்தப்படும் கருங்கொடிகள்—இறக்கப்படாமல் தொடர்ந்து பறந்துகொண்டேயிருக்கட்டும்! நமது உணர்ச்சியை அலை பிரதிபலித்துக் கொண்டேயிருக்கட்டும்! கறுப்புக் கொடியேற்றுவதால் பொலீசாரினதும், இராணுவத்தினரதும் இம்சைக்கு ஆளாக வேண்டியேற்படுமானால் நிறைந்த மகிழ்வுடன், அந்த இம்சையை தாங்கிக் கொள்வோம்! ஏனெனில் நாம் அகிம்சைவாதிகள்!

மே 22ம்நாள்—தமிழ்ஈழமெங்கும் சனநடமாட்டமின்றி சோகபூமியாக காட்சி தரட்டும்! வீடுகளை விட்டு வெளியேறுது. தமிழ் மக்கள் அனைவரும் தத்தம் வீடுகளிலேயே அடங்கியிருந்து அன்றைய தினம் பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும்!

வியாபார நிலையங்கள், படமாளிகைகள் ஆகியவற்றை மூடி—அரசாங்க பஸ்களிலும், புகைவண்டிகளிலும் பயணம் செய்வதை தவிர்த்து—தனியார் துறை நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் வேலைக்குப்போகாது—அமைதியான முறையில் ஒரு பரிபூரண ஹர்த்தாலை தமிழ் ஈழமெங்கும் நடத்தி தமிழ் மக்களின் உணர்ச்சியை அரசுக்கும், அகிலத்துக்கும் எடுத்துக் காட்டிடவேண்டும்!!

தமிழ் ஈழத்திலுள்ள நீதிமன்றங்களுக்கு போகாது தமிழ் வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களை அன்றைய தினம் பகிஷ்கரித்து அரசியல் சட்டத்துக்கு தமது எதிர்ப்பை எடுத்துக்காட்டிட வேண்டும்!

மாணவர்களே எதிர்காலத்தமிழ் நாட்டின் சிற்பிகள். புதிய சிங்கள அரசியல் திட்டத்தினால் உரிமைகளை இழந்து அடிமைகளாக அல்லல் படப்போகிறவர்கள் இன்றைய

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தமிழ்த்தேசிய இனத்தின் கரி நாள்

இத்திங்கள் 22-ம் நாள் புதிய அரசியல் சட்டத்தை கொண்டு வரப் போவதாக அரசு இறுதியாக அறிவித்துவிட்டது.

புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராகப் பொதுவாக இந்நாட்டு மக்களும்—குறிப்பாகத் தமிழ் தேசிய இனமும் எழுப்பிய ஆட்சேபனைகளுக்கும் கண்டனங்களுக்கும் அரசு சிறிது கூடச் செவிசாய்க்க மறுத்து விட்டது.

புதிய அரசியல் சட்டம் பற்றிக் கருத்துரைக்கப் பொது மக்களுக்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தாமல்—அவசர காலச் சட்டத்தின் கீழ் மக்களுக்கு வாய்ப்பூட்டுப் போட்டுக் கொண்டு—அரசியல் சட்டத்தைக் கொண்டு வருவது தகாதது—சனநாயகத்துக்கு முரண்பட்டது —சர்வாதிகாரத்தனமானது—என்றெல்லாம் இந்நாட்டு அரசியல் கட்சிகள் பலவும் கட்சி சார்பற்ற இயக்கங்களும், அறிஞர்களும் எத்தனையோ முறை இடித்துரைத்தும் அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகி விட்டது.

தான் விரும்பியபடி எதேச்சாதிகாரமாக ஒரு அரசியல் சட்டத்தை உருவாக்கி இந்நாட்டு மக்கள் மீது திணிக்க அரசு முடிவெடுத்து விட்டது! இந்நாட்டிலுள்ள ஏனைய அரசியற் கட்சிகள் குறிப்பாக எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கோ, ஆலோசனைகளுக்கோ, புத்திமதிகளுக்கோ கொஞ்சம்கூடச் செவிசாய்க்காமல், சர்வாதிகார வெறி பிடித்துப் புதிய அரசியல் திட்டத்தை நிறைவேற்றி விடுவது என்று அரசு கச்சை கட்டிக்கொண்டு செயற்படுகிறது.

அவசரகாலச் சட்ட விதிகள் என்ற இரும்புப் பிடியின் கீழ் மக்களின் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் கருத்துச் சுதந்திரம் என்பனவற்றையெல்லாம் நசுக்கி விட்டு எந்த ஒரு சனநாயக நாட்டிலும் அரசியல் சட்டம் எழுதப்படுவதில்லை! இங்குதான் இந்தச் சனநாயகப் படுகொலையைக் காணுகிறோம்!

அரசியல் சட்டம் என்பது மக்களுக்காக கொண்டு வரப்படும் ஒரு சட்டமாகும். இச்சட்டம் சம்பந்தமாக மக்களின் கருத்தை வெளிப்படுத்த மக்களின் அபிப்பிராயத்தை எடுத்துரைக்க — வாய்ப்பளிக்காமல் தனது பெரும்பான்மை பலத்தையும், அவசரகாலச் சட்டத்தையும் துணையாக கொண்டு புதிய அரசியல் சட்டத்தை மக்கள் மீது திணிக்கும் ஒரு அரசை மக்கள் அரசு என்று எப்படி அழைக்க முடியும் ?

மக்களின் கருத்தையறியாமல் — மக்கள் மீது கூட்டணி அரசு திணிக்கும் ஒரு அரசியல் சட்டமே புதிய அரசியல் சட்டமாகும்!

இந்நாட்டுத் தமிழ்த்தேசிய இனத்தைப் பொறுத்தவரை புதிய அரசியல் சட்டம் — நாம் ஏற்கனவே பல தடவைகளில் சுட்டிக் காட்டியுள்ளபடி, தமிழ் மக்களின் மொழி, இனமத ஆட்சி உரிமைகளைப் பறித்து, அவர்களை அடிமைப்படுத்தி அழித்தொழிக்க வழிவகுக்கும் ஒரு அரசியல் சட்டமாகும்! தமிழினத்தின் வாழ்வைப் பறித்திடும் மரணசாசனமாகும்!

அரசியல் திட்டத்தில் தமிழ் மக்களின் குறைந்தபட்ச உரிமைகளுக்காவது பாதுகாப்புத் தருமாறு அனைத்துத் தமிழ் கட்சிகளும் கூட்டாக ஆட்சியாளரிடம் கோரியும் அக்கோரிக்கை அலட்சியம் செய்யப்பட்டுவிட்டது. அரசியல் கட்சிகள் மட்டுமன்றி தமிழ் மக்களிடையேயுள்ள கல்விமான்களும் அறிஞர்களும் கூட்டிய கட்சி சார்பற்ற தமிழ் மாநாட்டில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளும் பொய்யாய் பழங் கதையாய்ப் போய்விட்டன!

இந்நாட்டின் இரண்டாவது பெரிய இனமான தமிழ் தேசிய இனத்தின் ஏகோபித்த எதிர்ப்பை கொஞ்சம்கூட மதிக்காது தன் இஷ்டத்துக்கு, தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்காத புதிய அரசியல் திட்டத்தை அரசு கொண்டுவருகிறது!

பௌத்தத்துக்கும், சிங்கள மொழிக்கும் முதலிடமும் சகல விதமான பாதுகாப்புகளும் அளிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் திட்டத்தில், தமிழ் மக்களின் அபிலாஷைகளும், கோரிக்கைகளும் முற்று முழுதாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தாம் விரும்பாத புதிய அரசியல் சட்டம் தங்கள்மீது திணிக்கப்படுவதை அமைதியான முறையில் அறவழியில் எதிர்ப்பதைதவிர தமிழ் தேசிய இனத்துக்கு வேறு வழியில்லை.

**புதிய அரசியல் திட்டத்தை எதிர்ப்பதிலே, தமிழரசுக்கட்சியுடன், தமிழ் காங்கிரசும் ஏனைய தமிழ் கட்சிகளும் இணைந்து நிற்பது தமிழ் இனம் செய்த பாக்கியமே என்று கூறவேண்டும்!**

தமிழர் கூட்டணியின் வேண்டுகோளுக்கமைய குடியரசு நாளை—தமிழ் ஈழமெங்கும் துக்கநாளாக, துயரநாளாக கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு தமிழினம் பகிஷ்கரிக்க வேண்டும்.

கடைகளையும், மற்றும் நிலையங்களையும் மூடி, அமைதியாக வீடுகளில் இருந்து தமிழினத்துக்கு நீதி கிடைக்க பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும். அரசு நடாத்தும் விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் பங்குபற்றாது அவற்றை முற்றாக புறக்கணிக்கவேண்டும்.

பாடசாலைகளுக்கு, 22, 23, 24 ஆகிய மூன்று நாட்களிலும் பிள்ளைகளை அனுப்பாது தமது எதிர்ப்பை அரசுக்கு தமிழ் மக்கள் தெரிவிக்கவேண்டும். இது மிகவும் முக்கியமானது என்று நாம் கருதுகிறோம்.

**ஈழத்தமிழினம் அடிமைத்தனத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது — ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும், புதிய அரசியல் சட்டத்தை தமிழன் எதிர்த்தே தீருவான்—தனது சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் இந்நாட்டில் நிலைநாட்டியே தீருவான் என்பதை நாடும் உலகும் அறியும்படி தமிழ் இனம் ஒன்றுபட்டு குடியரசு நாளான மே 22ம் நாளை பரிபூரண துக்கதினமாக [illegible] அனுட்டிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.**

# புதிய அரசியல் திட்டத்தை தமிழினம் நிராகரித்தது!

**புதிய அரசியல் திட்டத்தை முற்றாக நிராகரிப்பதென்று, திருகோணமலை நகரசபை மண்டபத்தில் 14-5-72ல் கூடிய தமிழர் மாநாடு முடிவு எடுத்தது.**

**தமிழரசுக் கட்சி, தமிழ்காங்கிரஸ் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள். கட்சிசார்பற்ற கல்விமான்கள், பேராசிரியர்கள், மாணவர் மன்றப் பிரதிநிதிகள், மொழிவழித் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், பெற்றார் சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட வடக்கு,கிழக்கு, மலையகம், கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய பல்வேறு பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் பின்வரும் தீர்மானத்தை இ. தொ. கா. பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி முன்மொழிய, தமிழ காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம் வழிமொழிய ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.**

'அரசியல் அமைப்பைத் தயாரிப்பதில் நாட்டு மக்கள் சுதந்திரமாகவும் பூரணமாகவும் பங்குபற்ற வழியின்றி மக்களின் பேச்சு சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் முதலியவை அவசரகாலச் சட்டத்தினாலும் கடுமையான தணிக்கையினாலும் பறிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் புதிய குடியரசு அரசியலமைப்பை நிறைவேற்ற முயற்சி நடப்பதினாலும்,

விஷேடமாகத் தமிழ் மக்களுடைய ஏகோபித்த கருத்தைப் புறக்கணித்து நிரந்தரமான வகுப்புவாதப் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு தமிழ் மக்கள் மீது ஓர் அரசியல் திட்டத்தைத் திணிக்க அரசாங்கம் முயற்சிப்பதாலும்,

வரலாற்றுச் சிறப்பும் பெருமையும் பெற்ற திருகோணமலையில் 1972ம் ஆண்டு மேமாதம் 14ந் திகதியன்று இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கூடிய மகாநாடு குறிப்பாகக் கீழ்க் காணும் காரணங்களுக்காக இவ்வரசியல் திட்டத்தை நிராகரிப்பதென்றும் அதை எக்காலத்திலும் எமது அரசியல் அமைப்பாக ஏற்றுக் கொள்வதில்லையென்றும் தீர்மானிக்கின்றது.

1. தனி மனிதர்களுக்கும் இன, கலாச்சாரக் குழுக்களுக்கும் சமத்துவத்துக்கும் உத்தரவாதமளிக்கக் கூடிய முழுமையான அடிப்படை உரிமைகளை வழங்க இவ்வரசியல் திட்டம் தவறி விட்டது.

2. இந்நாட்டில் வாழும் தமிழ்ப்பேசும் மக்கள் அனைவரும் சந்தேகப் பிரசைகளாகவும் ஆக்கப்பட்டிருக்கும் நிலையை என்றென்றைக்கும் உறுதிப்படுத்துவதாக இருக்கும் அதே நேரத்தில் சட்டபூர்வமாகக் குடியுரிமை பெற்றவர்களுடைய உரிமையையும் பாரபட்சமாக பறிக்க வகுக்கும் வகையில் பிரசைகளுக்கிடையில் வகுப்புகளை இவ்வரசியல் திட்டம் ஏற்படுத்தியுள்ளது.

3. கல்வி நிர்வாகம் ஆகிய துறைகளில் தமிழ் மொழிக்குச் சட்ட ரீதியான அந்தஸ்து அளிக்கத்தவறிய தன் மூலமும் இவ்வரசியல் அமைப்பு தமிழ்ப்பேசும் மக்களுடைய நியாயமான அபிலாசைகளை முற்றாக நிராகரித்து அவர்களைத் தம் சொந்த நாட்டிலேயே இரண்டாந்தரப் பிரசைகளாக்குகின்றது.

4. இன்று மதச்சார்பற்ற அரசாக இருக்கும் நிலையை மாற்றி புத்த மதத்திற்கு முதற்றன்மை அளிப்பதன் மூலம் இவ்வரசியல் திட்டம் ஏனைய மதத்தவர்களைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளுகின்றது.

## கூட்டத்தில் கலந்து கொண்டோர்

புதிய அரசியலமைப்பு பற்றி ஆராய 14-5-72ல் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் கருத்தரங்கில் கலந்துகொண்டோர் விபரம் வருமாறு:-

திருவாளர்கள், தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், க. ஜெயக்கொடி, கா. பொ. இரத்தினம், பா. நேமிநாதன், அ. தங்கத்துரை, எக்ஸ். எம். செல்லத்தம்பு, வி. தருமலிங்கம், சி. கதிரவேற்பிள்ளை, வீ. ஏ. அழகக்கோன், க. துரைரத்தினம், மு. ஆலாலசுந்தரம், வீ. ஆனந்தசங்கரி, மு. சிவசிதம்பரம், தா. சிவசிதம்பரம், எஸ். என். இராசதுரை, வழக்குரைஞர் எஸ். பொன்னையா, முன்னாள் மூதவை உறுப்பினர்கள் சு. நடராசா, எம். மாணிக்கம், சாம் தம்பிமுத்து, கலாமாணிக்கம் சி. மு. இராசமாணிக்கம், எம்.எஸ். செல்லச்சாமி, பேராசிரியர் நேசையா சேவுகப்பெருமாள், அறப்போரணி ஆரியநாயகம், ஆகியோருட்பட மொழி வழித்தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள், மாணவர் பேரவைப் பிரதிநிதிகளுமாக சுமார் 150 பிரதிநிதிகள், தமிழ் ஈழத்தின் நாலு திசைகளிலுமிருந்து வந்திருந்தனர்.

ஈழத்தமிழ் ஒற்றுமை முன்னணித்தலைவர் திரு. சுந்தரலிங்கம், கல்குடாபிரதிநிதி திரு. தேவநாயகம் ஆகியோர் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு ஆதரவு தெரிவித்து தந்தி அனுப்பியிருந்தனர்.

சுயாட்சிக் கழகத்தலைவர் திரு. வி. நவரத்தினத்துக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதாயினும், அவர் கலந்து [illegible] அனுப்பவுமில்லை.

## வெருட்டுகளுக்கு....

(1ம் பக்கம் தொடர்ச்சி)

**வெருட்டுகளுக்கெல்லாம் அஞ்சுபவர்கள் தமிழ் மக்களோ தமிழரசுக்கட்சியினரோவல்ல. வாயை மூடும்படி மஜீத்துக்கு நான் எச்சரிக்கை விடுகிறேன்."**

இவ்வாறு வவுனியா பா. உ. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு அவர்கள் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"கல்வியமைச்சர் பதியுதீனுக்கு தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணத்தில் எதிர்ப்புக்காட்டினால், அதேபோல் கிழக்கில் வாழும் முஸ்லிம்களும் தமிழர்களுக்கு எதிர்ப்புக்காட்டக் கூடுமென்றும் இரத்த ஆறு ஓடுமென்றும் இன்னும் ஏதோவெல்லாம் கூறி தமிழ் மக்களைப் பயமுறுத்தப் பார்க்கிறார் திரு. மஜீத். அவரது பேச்சு இனக்கலவரத்தைத் தூண்டுவது போல அமைந்திருக்கிறது.

பதியுதீன் மஹ்மூத்தை தமிழரசுக்கட்சி எதிர்ப்பது கல்வியமைச்சர் என்ற ரீதியிலே தவிர முஸ்லிம் என்ற முறையில் அல்ல என்பதை நாம் தெளிவாக கூறியிருக்கிறோம்.

கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கலவரம் ஏற்படும் என்று பூச்சாண்டிகாட்டி திரு. மஜீத் எம்மை பயமுறுத்த முடியாது. இவரது வெருட்டுகளுக்கு அஞ்சுபவர்கள் தமிழர்களல்ல.

1947ம் ஆண்டும், 1970ம் ஆண்டும் கிழக்கு மாகாணத்தில் திரு. மஜீத் போன்றவர்களால் தூண்டிவிடப்பட்ட குழப்பங்களின் இறுதி முடிவு எப்படி அமைந்தது என்பதை மஜீத்தும் அறிவார்; கிழக்கு மாகாண முஸ்லிம்களும் அறிவார்கள். எனவே வெருட்டாமல் வாயை மூடிக் கொள்ளும்படி திரு. மஜீத்தை கேட்டுக்கொள்ளுகிறேன்.

"நான் கிழக்கு மாகாணத்தில் பல ஆண்டுகாலம் பணி புரிந்தவன். கூடவே இருந்து அங்குள்ள மக்களின் மனோபாவங்களை அறிந்தவன். எனவே, கிழக்கு மாகாணத்து முஸ்லிம்களைப்பற்றியும் தமிழர்களைப் பற்றியும் நான் நன்கு அறிவேன். அதனால் மஜீத் 'இரத்த ஆறு' என்று பேசினால் நாம் அஞ்சி விடமாட்டோம்.

"தமிழரசுக் கட்சி முஸ்லிம்களுக்கு தலைமை தாங்க முடியாது என்று இன்று கூறும் இதே மஜீத் தமிழரசுக் கட்சியில் சேருவதற்கு முன்பு எடுத்த முயற்சிகளையெல்லாம் நாம் அறிவோம்; நாட்டு மக்களும் அறிவர்.

"மூதூர் தொகுதி தமிழ் பேசும் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அடிக்கடி தந்தை செல்வாவிடம் இரகசியமாக வந்து எத்தனையோ தடவைகளில் ஆலோசனை கேட்டவர் இதே மஜீத்தான். தேசிய அரசாங்கம் பதவியில் இருந்தபோது, சுதந்திரக் கட்சி தமிழ் சட்ட விதிகளை எதிர்த்த நேரத்தில், சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி யூ. என். பி. யில் சேருவது பற்றி இவர் தந்தை செல்வாவிடம் யோசனை கேட்டதும், தந்தை செல்வா அவர்கள் கட்சி மாறுவது கூடாது என்றுபுத்திமதிசொன்னதையும் இன்று மறந்துவிட்டாரா?

தந்தை செல்வாவின் புத்தியை அன்று கேட்டு நடந்ததால்தான் இன்று அரை மந்திரியாகவேனும் மஜீத் இருக்க முடிகிறது. இதை அவர் மறந்து வாயில் வந்தபடி தமிழரசுக் கட்சியைத் தூற்றுவது மனிதர்கள் செய்யக்கூடிய ஒரு காரியமல்ல!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் கற்பதால் தமிழ் இனத்துக்கு ஏற்படப்போகும் ஆபத்துக்கள்!

## பெற்றோர்களுக்கு ஜெயக்கொடி விளக்கம்!

சிங்களம் படிப்பிக்க விருப்பமுள்ளவர்களின் தொகையை உடனடியாக அறிவிக்கும்படி கல்வித்திணைக்களம் யாழ் மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளின் பெற்றோர் ஆசிரிய சங்கங்களுக்குச் சுற்றறிக்கை ஒன்று அனுப்பியுள்ளது. சிங்களம் படிப்பது சம்பந்தமாக உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடி உடுப்பிட்டித் தொகுதிப் பெற்றோர் ஆசிரிய சங்கத் தலைவருக்குத் தனது கருத்தை விளக்கியுள்ளார். திரு. ஜெயக்கொடியின் கருத்து, ஒவ்வொரு பெற்றோர் ஆசிரிய சங்கத்தினருக்கும் இப்பிரச்சினையில் தெளிவான முடிவெடுக்கப் பயன்படுமாதலால் அக்கருத்தை அப்படியே இங்கு தருகிறோம்.

அரசாங்க சுற்று நிருபத்தின்படி 9-ம் 10-ம் வகுப்புகளில் சிங்களம் போதிக்கப் பெற்றோரின் சம்மதம் கோரப்படுவதாக அறிகின்றேன். பெற்றோர் ஒரு தீர்மானத்திற்கு வர முன் பின்வரும் அபிப்பிராயங்களையும் கருத்திற் கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.



அரசாங்கத்தின் கல்விக் கொள்கைப்படி ஆங்கிலம் இரண்டாவது கட்டாயபாடமாகவும் தமிழ்ப்பிள்ளைகளுக்குச் சிங்களம் மூன்றாவது பாடமாகவும் கற்பிக்க எத்தனிக்கப்படுகின்றது. தமிழ் பிள்ளைகளுக்கு மாத்திரம் சிங்களம் கற்பிக்க உத்தேசித்து, சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர் நியமனத்திற்கு விண்ணப்பம் கோரப்பட்டிருக்கின்றது. சிங்களப்பிள்ளைகளுக்கு தமிழ் கற்பிக்க எவ்வித ஆயத்தமும் இல்லை. அப்படிச் செய்யும் நோக்கமும் அரசாங்கத்திற்கில்லை.

தற்போது பெற்றோர் விரும்பினால் என்று கூறிவிட்டு நாளடைவில் கட்டாயப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திடம் இருக்கின்றது.

சிங்களம் படித்திருந்தால் உத்தியோகம்பெற வாய்ப்புண்டு என்று எண்ண இடமில்லை. உத்தியோகம தற்போது சிங்களவருக்கே கொடுக்கப்படுகின்றது. தமிழருக்குக் கொடுக்கப்படும் உத்தியோகம் மாவட்ட அடிப்படையிலும் புள்ளி அடிப்படையிலும் கொடுக்கப்படுவதால் உத்தியோகம்பெற சிங்களம் அவசியமில்லை.

தற்போதைய சட்டப்படி தமிழ் மூலம் கல்வி கற்றவர்கள் உத்தியோகம் பெறுவதற்கு தமிழ் மூலம் பரீட்சை எழுத உரித்துண்டு. 1948ம் ஆண்டின் 28ம் இலக்க தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் இந்த உரிமை கொடுக்கப்படுகின்றது. இச் சட்டத்தின் 3-ம் சரத்தின்படி தமிழ் பாடசாலைகளில் சிங்களம் படிக்கப் போதிய வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது என்று அரசாங்கம் கருதும்போது இந்த உரிமை கிடையாது. ஆகையால் சிங்களம் கற்பிக்க தமிழ் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமித்தால் தமிழ் மொழி மூலம் உத்தியோகம் கொடுப்பது மறுக்கப்படும்.

தமிழ் மக்களுக்கு நூற்றுக்கு ஒரு வீதம் தானும் இனி அரசாங்க உத்தியோகம் கிடைப்பது அருமை. ஆங்கிலேயன் ஆண்ட காலத்திலுமே இரண்டு வீதத்தினரே உத்தியோகம் பெற்றனர். ஆகவே ஒரு வீதத்தினர் உத்தியோகம் பெற்றபின் சிங்களம் படிப்பதற்காக எல்லா மாணவரும் சிங்களம் படிக்க வேண்டுமா?

தமிழ் பள்ளிக்கூடத்தில் சிங்களம் படிப்பிக்கத் தொடங்கினால் நாளடைவில் சிங்களமே போதனை மொழியாவதுமன்றித் தமிழ் அழிந்து ஒழிந்து போகும் என்பதை நாம் உணர வேண்டும்.

ஈழவளநாட்டில் தமிழ்மொழி பாவிப்பில் தொடர்ந்து இருக்க வேண்டுமானால் தமிழ் அழியாது தழைக்க வேண்டுமானால் தமிழ் பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதை ஏற்க முடியாது என்பதைத் தாழ்மையுடன் சமர்ப்பிக்கின்றேன்.

# அரசியல் சட்டத்துக்கு மானிப்பாய் ப. ச. எதிர்ப்பு!

மானிப்பாய் பட்டின சபை மாதாந்த கூட்டத்தில் 3ம் வட்டார உறுப்பினர் திரு. சு. கதிர்காமத்தம்பி புதிய அரசியல் திட்டம் தமிழ் இனத்தின் மரண சாதனமாக இருப்பதால் அப்புதிய அரசியல் திட்டத்துக்கு ஆதரவாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் எவரும் கையெழுத்திடக்கூடாதென இச்சபை கோருகிறது'' என்ற தீர்மானத்தை கொண்டு வந்தார். 7ம் வட்டார அங்கத்தவர் திரு. சி. மார்க்கண்டு அதை ஆமோதித்தார். தீர்மானம் நிறைவேறியது.

3ம் வட்டார அங்கத்தவர் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியதாவது:- ''சென்ற 20 ஆண்டுகளாக தமிழரின் அரசியல் உரிமை மொழி உரிமை, இவைகளை முன்வைத்துத்தான் தேர்தல்கள் நடக்கின்றன. அரசியல் அல்ல, அநியாயம் தான் நடக்கிறது. தமிழ் சமுதாயம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த சமுதாயம் இலங்கையை ஒரு காலத்தில் அரசு புரிந்தவர்கள் இலங்கைக்கு சுதந்திரம் கொடுத்தது சிங்களவருக்கு மாத்திரமல்ல சகலருக்கும் தான்.

''தேசிய சபை விரும்பினால் வட கீழ் மாகாணங்களில் தமிழ் மொழியை நீதிமன்ற மொழியாக விடலாமென்பது அரசியல் திட்டத்தின் அடிப்படை தீர்மானம். சிங்களமொழி பௌத்த மதம் இவைகளின் உரிமையை குடியரசு திட்டத்தில் வரைந்து விட்டு. தமிழ் மொழி உரிமையை தேசிய சபையின் தஞ்சத்தில் விட்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் தேசிய சபையில் விட தமிழர் வந்தேறு குடிகளா? பிச்சைக்காரரா?

இப்படியான பாரபட்சமான திட்டம் இத்திட்டம். ஓர் நீதியான அரசாங்கம் இப்படியான திட்டத்தை வகுக்கமாட்டாது. இத்திட்டம் அரசியல் திட்டமல்ல. சமூகத்தை சமூகம் பிடித்து விழுங்கும் திட்டம். தென் இலங்கையர் கூடிய தொகையினர் என்ற காரணத்தால் குறைந்த சமூகத்தை ஒதுக்கும் திட்டம்.

தமிழரில் சிலர் சுயநலவாதிகள். அண்டிப் பிழைக்கிறவர்கள். பதவி மோகம் பிடித்தவர்கள் துரோகிகளாகி விட்டார்கள். இப்படியான தலைவர்களை விரட்ட வேண்டிய கடமை பொது மக்களுடையது. இப்படியான சுயநலவாதிகளை தெரிந்தது பொது மக்களின் குற்றமே. ஆகவே தமிழர்கள் எல்லோரும் ஒரே கொள்கையில் ஒத்துழைக்க வேண்டும். ஒன்றுசேராவிட்டால் தமிழ் சமூகம் அழிந்தொழிந்து விடும்.

''இலங்கைத் தமிழர் சில சில்லறை உத்தியோகம் பட்டம், உப தபால் கந்தோர், பஸ் கொண்டக்டர் உபாத்தியாயர் வேலைகட்காக, வருகிற அமைச்சர், அரை அமைச்சர்கட்கு கும்பம் வைத்து, ஆலாத்தி எடுத்து பல் இழித்து, கும்பிட்டு, குடை பிடித்து வணங்குகிறார்கள். அவர்களும் இனிக்கபேசி போகிறார்கள். சொல்வதொன்று செய்வதொன்றாக முடிகிறது. தமிழர் தங்கள் மானத்தை விற்று அடிமைத்தனமாக நடக்கக்கூடாது.''

# சிங்களம் படிப்பதால் செந்தமிழ் அழியும்!

(சிங்களத்தை கற்றிடாதே என்று ஈழத்தமிழனுக்கு பிரச்சாரம் செய்யும் கேவல நிலையை, பதவிபெறத் துடிப்போர், பதவி உயர்வுபெறத் துடிப்போர், பந்தம் பிடிப்போர் போன்ற இனத்துரோகிகளைகொண்ட சில பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினது அடிமைப் புத்தியை அழித்தொழிக்கும் நோக்கமாகவே இக்கட்டுரையை எழுதுகிறேன்.)

## பெற்றோர்—ஆசிரிய சங்கத்தினரே! தமிழுக்குத் துரோகம் செய்யாதீர்!

ஈழவள நாட்டை பொறுத்தமட்டில், சிங்களம், தமிழ் ஆகிய இரண்டுமொழிகளையும் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்றனர். இந்த இரண்டு இன மக்களும் அன்னியோன்யமாகவும், சுபீட்சமாகவும், வாழ்ந்தால்தான், ஐக்கிய இலங்கையை உருவாக்க முடியும். அடக்குமுறையின் மூலமோ, அதிகார வெறியாலோ, ஒரு இனத்தை அடக்கிவிடமுடியாது. இரத்தம் தோய்ந்த வரலாறுகள் கற்பிக்கும் பாடம் இது. ஏன்? அண்மையில் விடுதலை பெற்ற வங்கதேசமே இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

பெரும்பான்மையாக வாழும் இனம், ஆட்சியை தன்வசம் வைத்துக் கொண்டு, துப்பாக்கிமுனையில் எதிர்ப்புக்களை அடக்க எத்தனித்தாலும், சுதந்திர தாகமும் தியாக உணர்வும் ஊறிப்போனவனின் நெஞ்சில் கொழுந்துவிட்டு எரியும் சுதந்திரத் தீயை அடக்கிவிடமுடியுமா?

ஆனால் சிறும் இராணுவமும், திறந்து வரவேற்கும் சிறைச்சாலையும், வீரத்தமிழினத்தின் விடுதலை உணர்வை நசுக்கிவிட முடியுமா? முடியாது. ஆனால் அடக்குமுறைகளிலும் பார்க்க இலங்கைத் தமிழினத்தை வேரோடு அழித்துவிடும் கொடிய ஆயுதம் தமிழ் மக்களிடையேதான் உருவாகி வருகிறது.

எல்லாம் தமிழ் என்னும் உணர்ச்சிக்குரல் எழுப்பப்படும் சமூகத்தில், மொழிக்காக பொன்னையும் பொருளையும் பெறற்கரிய உயிரையும் இழந்தோரின் வீரவரலாறுகளைக் கற்பிக்கும் சமூகத்தில், உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு என்று தமிழ் உணர்ச்சியை ஊட்டி வளர்த்த அதே சமூகத்தில் தான், அண்டிப் பிழைப்போரும் வாழ்கின்றனர்! அடுத்துக்கெடுப்பவர்களும் வாழ்கின்றனர்!! உண்டியைபெறுவதற்கு உரிமையை விற்பவர்களும் வாழ்கின்றனர்!!!

மானம் பெரிதா? வயிறு பெரிதா? என்ற பிரச்சினை தான் அவர்களுக்கு பெரிதாக இருக்கிறது. வயிற்றை நிரப்ப, ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே'' என்பதை மறந்து அவற்றை விற்றுவாழும் நிலைக்கு வந்துவிட்டனர் சிலர்.

''பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும் செந்தமிழில் அழும் ஓசை கேட்கவேண்டும்'' என்று உணர்ச்சியை சிந்தும் சமூகத்தில் 'வாழ்பவன்தான் வயிற்றை நிரப்ப மொழியை விற்று வாழ்கிறான்' என்றால் வேதனைப்படாமல் இருக்க முடியுமா?

கடந்த பல நூற்றாண்டுகளாக ஆங்கிலத்தை கற்றவர்கள் இன்று சிங்களத்தை கற்றால் என்ன என்று கேட்போர் இன்றும் இருக்கின்றனர். ஒரு இனத்தின் விருப்பத்துக்குமாறாக, விரோதமாக, அந்நியமொழி திணிக்கப்படுவதைத்தான் எதிர்க்கிறோம்.

சிங்களத்திணிப்பால் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் இருக்கும் தமிழ்மொழியின் தனிச் சிறப்பும் கலை கலாச்சாரமும் அழிந்து போகும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அந்நியமொழி அறிந்திருப்பது கூடாது என்பது என் கருத்தல்ல, ''தாய்ப்பிச்சை எடுக்கும்போது மகன் தருமம் செய்த கதைபோல்'' எம் தமிழுக்கு ஏற்படக் கூடாது என்றுதான் கேட்கிறோம். எம்மொழியை மறந்து, உரிமைகளை இழந்து, மாற்று மொழிகளுக்கு சரணாகதி அடையக்கூடாது என்பது தான் என்கருத்தாகும்.

உயிரை நிகர்த்த தமிழ் மொழியை விற்று, அற்ப சலுகைகளைப் பெற்று வயிற்றை நிரப்ப இன்றைய தமிழன் நினைத்தால், எதிர்கால தமிழ் சமூகம் இக்கட்டான நிலைக்கு உள்ளாகும் என்பது மறக்கமுடியாத உண்மையாகும்.

[illegible] இருக்கிறது. எம் சமூகம் வாழ்ந்துதான் போகிறது— என்ற நினைப்பு தமிழனுக்கு மறந்து விட்டது என்பதுதான் உண்மையாகும். அற்ப சலுகைகளுக்காக ஒரு இனத்தையே அழிக்க, காட்டிக்கொடுக்க, நினைப்பவர்கள் வாழும் வரை எந்த இனமும் நிம்மதியுடன் வாழ முடியாது. இந்த இனத்துரோகிகளை ஒரு மூலையில் நதுக்கிவிடவேண்டியது இன்றைய தமிழனின் தலையான கடமை.

காலத்தை வென்று கொண்டு காவியம் படைத்ததும், கங்கையைவென்று கொண்டதும், கடாரத்தில் கொடி நாட்டினதும், கண்ணகிக்கு சிலை எடுப்பித்ததும் வரலாறுகளாகத்தான் இருக்கின்றன. இந்த வீர வாழ்வு மீண்டும் கிடைக்காதுதான். அதற்காக காட்டிக்கொடுப்பவர்களின் கைங்கரியங்களை விட்டு வைக்க முடியுமா?

எம் உள்ளத்தில் உறுதியும், எம் இனம் வாழவேண்டும் என்ற நல்ல நோக்கமும், இருந்தால் நிச்சயமாக நாம் முன்னேற முடியும். உரிமை வேண்டும், சலுகைகள் தேவையில்லை என்று குரல் கொடுத்தால் மட்டும் போதாது அதைச் செய்கையிலும் காட்ட வேண்டும்.

எமக்கு பூரண நிலவுரிமை மொழி உரிமை குடியுரிமை கிடைக்கும் வரை எம்மை அடிமைகொள்ள நினைக்கும்

(9-ம் பக்கம் பார்க்க)

**எஸ். ஜே. வி. ராஜகுமார்** (மாதகல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழமெங்கும் தமிழ்ப்பெயர் முழங்கட்டும்!

## அடிமைமோகத்தை அகற்றி தலைநிமிர்ந்து தமிழனாக வாழ்வோம்!

மதராஸ் என்று அழைக்கப்பட்ட தமிழர் வதியும் நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்ற பெயரைச் சூட்டிய தன்மூலம், தமிழ் நாட்டை அகில உலகும் அறியச்செய்தார் அறிஞர் அண்ணா. அதனால் தமிழ் உணர்வுமிக்க மக்களெல்லாரும் பெருமிதமடைகின்றனர். தமிழ் மொழியும், தமிழ் பண்பாடும் அந்நியருடைய ஆதிக்கத்தாலும், அந்நிய மொழியின் தாக்கத்தாலும் சீரழிக்கப்பட்டு சின்னபின்னப் படுத்தப்படாமல் தடுத்து நிறுத்தினார் அறிஞர் அண்ணா.

யாப்னா (Jaffna) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்ற ஈழத்தமிழ் மாநிலத்தை இனிமேல் ''யாழ்ப்பாணம்'' என்றே ஆங்கிலத்திலும் அழைக்கவேண்டும், எழுதவேண்டுமென்று யாழ் மாநகரசபை தீர்மானம் நிறைவேற்றிய செய்தி தமிழ் மக்களுக்கு பெருமகிழ்ச்சி தரக்கூடியதாகும்.

தமிழினத்தின் பண்பாட்டையும், மொழியையும் சிதைத்துச் சீரழிக்கக் கங்கணம் கட்டியுள்ளோருக்குப் பாதபூசை செய்யும் துரோகப்பாவை முதல்வராகக் கொண்ட யாழ் மாநகர சபையில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைக் கேட்டு ஆச்சரியமும், அதிசயமுமுறுகின்றனர் தன்மானத் தமிழர். தமது துரோகத்தை மூடிமறைப்பதற்கு இத்தீர்மானத்தை ஒரு திரையாகப் பயன்படுத்த அவர்கள் எண்ணினாலும், ஒரு நற்செயலை நிறைவேற்றியதற்காக நாம் அவர்களை மனமாரப் பாராட்டுகிறோம். இது வெறும் தீர்மானமாகவே இருந்துவிடாமல் உடனடியாகச் செயற்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கையையும் எடுப்பார்களென்றே எதிர்பார்க்கிறோம்.

ஆங்கில ஆட்சியின் தாக்கத்தினால் தனித்தமிழ் ஊர்ப்பெயர்களெல்லாம் ஆங்கில மயமாக்கப்பட்டுவிட்டன. ஆங்கிலம் அறியாத தமிழர்கள்கூட, மறந்தோ அல்லது ஆங்கிலத்தில் கூறுவதுதான் பெருமையென்ற வரட்டு வேதாந்தத்தாலோ 'யாப்னா' 'றிங்கமலி', 'பொயின்ற் பெட்ரூ' 'பட்டிக்கலோ' என்றே கூறுகின்றனர். இந்த இழிநிலையைத் துடைத்தெறிய வேண்டாமா?

எங்கிருந்தோ வந்த ஆங்கில ஆட்சியின் தாக்கமே இவ்வளவு தூரம் தமிழ்ப் பெயர்களைச் சிதைத்துவிட முடியுமென்றால், இனி என்றென்றும் உடனிருந்தே ஆதிக்கம் செலுத்த எண்ணும் சிங்கள ஆட்சியின் தாக்கத்தால் தமிழ்ப்பெயர்கள் மட்டுமல்ல தமிழினமே அழிக்கப்படும் ஆபத்து ஏற்படுகின்றது. இந்தப் பேராபத்தைத் தமிழரில் பலர் உணர்ந்ததாகவே தெரியவில்லை. தமிழரே தமிழ்ப் பெயர்களைச் சிங்கள மயமாக்குவதற்குத் துணைபுரிகின்றனர்.

### தன்னாட்சி

'யாப்னா'வை யாழ்ப்பாணம் ஆக்கினால் மட்டும் போதாது, 'யாப்பனய'வும் யாழ்ப்பாணமாக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் யாழ்பாணம் 'யாப்பனய' எனச் சிங்களமயமாக்கப்பட்டதைப் போல யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரும் சிங்களவராக்கப்பட்டு விடுவர்.

ஆங்கில ஆதிக்கம் இருந்த இடத்தில் இன்று ஆணவமுள்ள சிங்கள ஆட்சியிருக்கின்றது. சிங்கள ஆதிக்கம் தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் 'உடனிருந்து கொல்லும் வியாதி போன்றதாகும். இந்த வியாதிக்குத் தமிழர் தன்னாட்சியென்ற மாற்று மருந்து கொடுக்காவிட்டால் அது விரைவில் தமிழினத்தை அழித்தொழித்துவிடும்.

தமிழர் வதியும் ஈழவள நாட்டைச் சிங்களநாடாக்கிவிட சிங்கள இனம், ஆட்சி அதிகாரத்தின் துணையுடன் படாதபாடு படுகின்றது. புதைபொருள் ஆய்வுகள் யாவும் சிங்கள பௌத்தம் என்ற கண்ணோட்டத்துடனேயேசெய்யப்படுகின்றன. தமிழ்க் கிராமங்களின் பெயர்களைச் சிங்கள மயமாக்க முயலுகின்றனர். ஆட்சியாளரின் பதிவேடுகளிலெல்லாம் தமிழ்ப்பெயர்களைச் சிங்கள மயமாக்கி எழுதப்பகீரதப்பிரயத்தனங்கள் நடக்கின்றன. சில தமிழ் வரலாற்றாசிரியர்கள் கூடச் சுயநல நோக்கங்களுக்காக சில தமிழ்க் கிராமங்களின் பெயர்களைச் சிங்களப் பெயர்களாக்கித் திரிபுவாத வரலாறு படைக்கின்றனர்.

### வெள்ளம் வருமுன்...!

வெள்ளம் வருமுன்னர் அணைகட்டவேண்டும். வெள்ளம் வந்தபின் கூக்குரலிடுவதால் ஆவதொன்றுமில்லை. சிங்கள பௌத்தம் என்ற பெருவெள்ளம் தமிழ் இனத்தை மூழ்கடிக்கப் புதிய அரசியல் சாசனத்துடன் வரப்போகின்றது. அந்தப் பெருவெள்ளம் வந்து விட்டால் அதை எதிர்த்து அணை போடுவதற்கு எத்தனையோ பெரும் தியாகங்களை நாம் செய்யவேண்டிவரும். தன்மானமும், தமிழுணர்வும் மிக்க தாய்மார்களே, இளைஞர்களே, பெரியோர்களே நீங்கள் தமிழர்களாகத் தமிழ்ப் பண்பாட்டுடன் வாழப்போகின்றீர்களா அல்லது சிங்கள பௌத்த வெள்ளத்தில் மூழ்கி மாழப்போகின்றீர்களா?

தமிழ் மக்களாகிய நாம் தமிழ் மொழியையும், பண்பாட்டையும் பேணிக்காத்துத் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ என்னசெய்யவேண்டும் என்று ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள். தமிழ்த்தாயின் வயிற்றில் பிறந்து, தமிழ்ப்பாலுண்டு வளர்ந்த நீங்கள் தமிழ்த் தாய்க்கு வரும் ஆபத்தைப் போக்க உங்கள் கடமையைச் செய்து விட்டீர்களா?

### தாயும் தாய்மொழியும்

பெற்ற தாயை ஒரு மகன் புறக்கணித்து விட்டால் அவனை எள்ளி நகையாடுகிறீர்கள், காறியுமிழ்கின்றீர்கள். ஆனால் பெற்றதாயினும் மேலான தாய்மொழியைப் புறக்கணித்து, இனத்துக்குத் துரோகமிழைத்து வாழ்பவரைப் போற்றிப் புகழ்கிறீர்களே உங்களுக்கு வெட்கம்மானம் இல்லையா? நீங்களும் தமிழர்தானா?

உங்களைப்பெற்ற தாயை ஒரு கயவன் நடுவீதியில் வைத்து மான பங்கம் செய்யும் போது, அவனுடைய பலத்தைக் கண்டு அஞ்சி எனக்கு மனைவி மக்கள் இருக்கிறார்கள்'' என்று குடும்பப் பொறுப்புப் பேசிக் கொண்டிருப்பீர்களா? அக்கயவன்செய்வது சரியென்று கூறுவீர்களா? இல்லையே!

ஆனால் தாயினும் மேலான தமிழ்மொழியை ஆட்சியாளர் அவமானப்படுத்தும் பொழுது, ஆட்சியுரிமை இல்லையென்று அடிமையாக்கும் பொழுது; ஆட்சியாளரின் பெரும்பான்மையைக் கண்டு அஞ்சியோ, அல்லது எச்சில் இலை நக்கும் சுயநலத்தாலோ, குடும்பப் பொறுப்புகளைப் பற்றிப் பேசுகிறீர்கள். ஆட்சியாளர் செய்வது சரியென்று துதிபாடுகிறீர்கள். நீங்களும் மனிதர்கள் தானா? உங்களுக்கும் மான உணர்வு இருக்கிறதா?

### காகமும் தமிழனும்

காகம் மிக அற்பமான ஒரு பறவை. அது கூடுகட்டுகின்ற காலத்தில் அக்கூட்டிற்கு யாராவது சிறுபையன் கல்லெறிந்தால், அல்லது

**யாழ் வேந்தன்**

கூட்டைக் குலைக்க முயன்றால், மனிதர்கள் அனைவரையுமே துரத்திக் கொத்துவதை நாம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். ஆனால் தமிழர்களாகிய நீங்கள் தமிழருடைய நாட்டையும் மொழியையும் அந்நியர் அழித்தொழிக்க முயலும்போது கூட ஆமைகளைப் போல் ஐந்தடக்கி வாழுகின்றீர்களே!

பெயரளவில் மட்டும் தமிழர்களாக வாழும் சீமான்களே நீங்கள் தமிழ்த்தாயின் மானங்காக்கப் போர்க்களத்திற்கு வர வேண்டாம்,

## பிறக்கும் குழந்தைக்கெல்லாம் தூய தமிழ்ப் பெயர்களையே சூட்டுவோம்!

பொன் பொருளைத் தர வேண்டாம் அதற்கெல்லாம் ஆயிரமாயிரம் தன்மானத் தமிழர்கள் இருக்கிறார்கள். உங்களை நாம் மன்றாடிவேண்டுவதெல்லாம் தமிழராக வாழுங்கள், தமிழ்ப் பெயர்களைச் சிதையாதீர்கள்— சிங்கள மயமாக்காதீர்கள்; தமிழிலே கருமமாற்றுங்கள் என்பதுதான்.

சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் பிள்ளையார் கோவிலாண்டி. அதுபோல தமிழ் விரோதமான வார்த்தைகளைப் பேசி விடுதலைப்போருக்கு ஊறுவிளைவிக்காதீர்கள்.

### தமிழ் பெயர் சூட்டுங்கள்

தமிழ்த் தாய்மார்களே நீங்கள் பெற்றெடுக்கும் அருமைச் செல்வங்களுக்கு அன்பழகன், இளங்கோவன், எழிலரசன், மதியழகன், எழில்மதி, மதியரசி போன்ற தேனொழுகும் தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள். தமிழ்ச் செல்வங்களாகிய எங்கள் குழந்தைகளுக்கு அநுரா, விஜிதா, கருணாரத்னா, வணசிங்க போன்ற சிங்களப் பெயர்களைச் சூட்டி அவர்களைச் சிங்களவர்களாக்காதீர்கள். சிங்களப்பெயர்களைச் சூட்டுவதால் உங்கள் பிள்ளைகளுக்கு உத்தியோகம் கிடைக்குமென்றோ, சிங்களவர் உங்களை உயர்வாக மதித்துச் சலுகை செய்வார்களென்றோ கனவு காணாதீர்.

தமிழ் மாநிலத்தின் வீதிகளிலுள்ள வழிகாட்டி [illegible] கும் பொழுது தமிழ்ப்பெயர்களையே வேண்டுமானால் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் எழுதவேண்டும். தமிழக் கிராமங்களினதும் பெயர்களை ஆங்கில மயமாக்கியோ சிங்கள மயமாக்கியோ எழுதக் கூடாது.

பருத்தித்துறை என்ற பழந்தமிழ்ப் பெயரை ஆங்கிலத்தில் ''பொயின்ற் பெட்ரூ'' என்றும், சிங்களத்தில் ''பெதுறுதுறுவ'' என்றும் எழுதும் வழக்கத்தை உடனடியாக நிறுத்த வேண்டும். பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்யும் பொழுது, பிரயாணச் சீட்டு வழங்குவதற்காக எவ்விடத்திற்குப் போகிறீர் என்று கேட்டும் பொழுது ''பொயின்ற் பெட்ரூவிற்கென்றோ,'' ''யாப்னா''விற்கென்றோ கூறுதீர்கள். பருத்தித்துறை, யாழ்ப்பாணம் என்ற பழந்தமிழ்ப் பெயர்களையே கூறுங்கள்.

சிங்கள மயமாக்கப்பட்ட தமிழ் ஊர்ப்பெயர்களைச் சிங்கள மொழியில் எழுதி வழங்குவதால் காலகெதியில் அந்த ஊர்களைச் சிங்கள ஊர்களென்று சிங்கள மக்களும் அரசும் உரிமை கொண்டாடினால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆகையால் தமிழ்நாட்டைச் சிங்கள நாடாக்க முயலும் சதித்திட்டத்திற்கு உடந்தையாக இருக்க வேண்டாமென்று தமிழ் மக்களாகிய உங்களைத் தயவாய் வேண்டுகிறேன்.

### ஆங்கில மோகம்

சிங்கள மக்கள் தங்கள் தாய் மொழிப் பற்றுடன் சிங்கள மொழியில் கருமமாற்றுகின்றனர். ஆனால் தமிழர்களாகிய நாம் தமிழ்ப் பற்றுக் சிறிதுமின்றி ஆங்கில மோகம் கொண்டவர்களாக ஆங்கிலத்தில் எழுதுவதையே பெருமையாகக் கருதுகின்றோம். இன்னும் சிறிது காலம் போனால் சிங்கள மோகம் கொண்டவர்களாகச் சிங்களத்தில் எழுதுவதையே பெருமையாகக் கருதுபவர்களாக மாறிவிடுவோம். இன்று ஆட்சியாளரின் அடிவருடிகளிற் பலர் மந்திரிமாருக்கும், அதிகாரிகளுக்கும் கொடுக்கும் விண்ணப்பங்களைச் சிங்களத்தில் கொடுக்கத் தொடங்கியிருப்பதைச் சில இடங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. சுயநலங்காரணமாக இவர்கள் செய்யும் இச்செயல் இன்னும் சில காலங்களில் ஒரு கட்டாய காரியமாகிவிடும், என்பதை இவர்கள் உணர்கிறார்களில்லை.

யாழ் மாநகர நூல் நிலையத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் விடுமுறை பெறுவதற்காக ஒரு தமிழ் விடுமுறை விண்ணப்பப் பத்திரத்தை ஆங்கிலத்தில் நிரப்புவதைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. தமிழில் உள்ள ஒரு பத்திரத்தையே தமிழில் நிரப்புவதற்கு அந்த ஊழியருடைய ஆங்கில மோகம் அவரை விடவில்லை. இவரைப்போல் எத்தனை தமிழர்கள் இருக்கிறார்கள்.

பெற்றவர்களுக்கும், உற்ற நண்பர்களுக்கும் எழுதும் கடிதங்களைக்கூட ஆங்கிலம் படித்த தமிழர் ஆங்கில மொழியிற்றான் எழுதுகின்றனர். படுக்கையறையில் மனைவியுடன் கொஞ்சி மகிழும்போதுகூட அந்தத் துரைமார்கள் ஆங்கிலத்தில்தான் கொஞ்சுகின்றனர் போலும். கடிதங்களுக்கு எழுதும் முகவரிகளும் ஆங்கிலத்திற்றான் எழுதப்படுகின்றன.

சிங்கள நாட்டிலிருந்து ஆட்சியாளர் அனுப்பும் சிங்கள மொழியில் முகவரியிடப்பட்ட கடிதம் தமிழ்க் கிராமத்தில் வசிப்பவரிடம் பத்திரமாகப் போய்ச் சேருகின்றது. ஆனால் தமிழ் முகவரியிடப்பட்ட ஒரு கடிதம் தமிழ் கிராமத்திற்குப் பத்திரமாய்ப் போய்ச் சேர மாட்டாதா? நாமெல்லாம் சுதந்திர மக்கள் என்று கூறுகின்றீர்களே அப்படியானால் ஏன் கடிதங்களுக்குத் தமிழ் மொழியில் முகவரி எழுதத் தயங்குகின்றீர்கள். சுதந்திரநாட்டில் நமக்கு இந்த உரிமை கூட இல்லையா?

### தமிழ்க் கொலை

சிங்கள நாட்டில் தமிழில் எழுதப்பட்டிருக்கும் ஊர்ப் பெயர்களில் தமிழ் மொழி கொலை செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். தமிழ் எழுத்துக்கள் கூட உருமாற்றம் செய்யப்படுகின்றன. சிங்களச் சொற்கள் தமிழ் மொழியில் புகுத்தபடுவதன் மூலம் தமிழ் மொழி சிங்கள மயமாக்கப்படுகின்றது. சலுசல, லக்சல, சாதிகசம்பத, லங்காசம், போயா, போர போன்ற பலசிங்களச் சொற்கள் தமிழ் மொழியில் புகுத்தப்பட்டுவிட்டன. இவ்வாறு தமிழ் மொழியினுள் சிங்களச் சொற்கள் திணிக்கப்படுவதால் காலகதியில் தமிழ்மொழிசிதைக்கப்பட்டு விடும்.

நாட்டின் பிரதமர் கூட தான் ஒரு சிங்கள பௌத்தர் என்ற உணர்வுடனேயே செயல்படுகின்றார். இந்நாட்டில் வதியும், பலஇன, பலமத, பல மொழிபேசும் மக்களுக்கெல்லாம் தான் தலைவர் என்று இந்நாட்டின் பிரதமர் ஒருபோதும் கூறியதில்லை. சிங்கள மொழியினதும், பௌத்த மதத்தினதும் வளர்ச்சிக்காகத் தனது அரசு பாடுபடும் என்றுதான் அவர் பேசுவார். உலகில் சமாதானம் நிலவ வேண்டுமானால் பௌத்த தர்மம் உலகெங்கும் பரவ வேண்டுமென்று பறை சாற்றுவார். இளைஞர்கள் ஒழுக்க சீலர்களாக வளரவேண்டுமானால் அவர்களுக்குப் பௌத்த நெறி புகட்ட வேண்டுமென்று புகலுவார். இப்படி ஒரு மதத்திற்கும், ஒரு மொழிக்குமே தான் உரியவர் என்று எண்ணும் ஒருவரை பல இன, பல மொழி, பல மத மக்கள் எவ்வாறு தமது பிரதமர் என்று மதிக்க முடியும். இப்படிப்பட்ட ஒரு பிரதமரையுடைய நாட்டில் எவ்வாறு தேசிய ஒருமைப்பாடு ஏற்பட முடியும்.

### தமிழ் இனத்தைக் காப்பீர்

பெயரளவில் தமிழராக வாழும் சீமான்களே! தங்களுடைய பிள்ளைகளுக்குச் சிங்களப் பெயர்களைச் சூட்டியும், சிங்களத்தில் கருமமாற்றியும் தமிழ் ஊழியர்களுக்குச் சிங்கள மயமாக்கப்பட்ட பெயர்களை எழுதியும் வருவதோடு, ஆட்சியாளர் சிங்களச் சொற்களைத் தமிழ்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களே பள்ளிகளைப் பகிஷ்கரிப்பீர்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் தாம். இந்த மாணவர்களின் மத்தியில் சுதந்திர வேகத்தையும் விடுதலை வேட்கையையும் பிஞ்சு உள்ளத்திலே பதிய வைத்திட வேண்டியது மிக அவசியமாகும்! தமிழ் மாணவர்கள் விடுதலை வீரர்களாக உருவாக வேண்டும்!

**உரிமைப் போராட்டத்தில் குதித்திட தமிழ் மாணவர்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பம் இப்போது கிட்டியிருக்கிறது! பூட்டிய இரும்புக் கதவு திறந்தது—சிறுத்தையே வெளியே வா! என்று மாணவமணிகளை அழைக்கிறேன்!**

மாணவ மணிகள் செய்யவேண்டியது வேறொன்றுமில்லை— புதிய அரசியல் திட்டம் கொண்டுவரப்படும் மே 22ம் நாளும் அதைத் தொடர்ந்து 23, 24ம் திகதிகளிலும், பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்லாது அவற்றைப் பரிபூரணமாகப் பகிஷ்கரிக்க வேண்டும். மூன்று நாட்களுக்கு தொடர்ச்சியாக மாணவமணிகள் நடத்தவிருக்கும் இப் பகிஷ்கரிப்பு இயக்கம்தான் அரசியல் சட்டத்துக்கு எதிரான போராட்டத்தின் ஈட்டி முனையாக இருக்கப்போகிறது. எனவே மாணவர்களே, மாணவிகளே! தமிழ்த்தாயின் மீதாணை! மூன்று நாட்களும் பாடசாலைகளை பகிஷ்கரியுங்கள்! அன்னைத் தமிழின் கைவிலங்கொடிப்பது பற்றி சிந்தியுங்கள்! அரசு நடத்தும் குடியரசு விழாக்கொண்டாட்டங்களை முற்றாகப் பகிஷ்கரியுங்கள் என்று கேட்டுக்கொள்வேன்!

பெற்றோர்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுப்பேன் —உங்கள் பிள்ளைகளை கோழைகளாக, அடிமைகளாக, உருவாக்காதீர்கள். வீரர்களாக, தைரிய சாலிகளாக அவர்களை உருவாக்குங்கள்! எதிர்காலத் தமிழினத்தின் தலைவர்களாக வரப்போகிறவர்கள் அவர்கள்! அவர்களை அடிமைகள் போல் குடியரசு விழாக் கொண்டாட்டங்களுக்கு அனுப்பாதீர்கள்! மே 22, 23, 24 மூன்று நாட்களும் பாடசாலைகளுக்கு அனுப்பாதீர்கள்!

## அரசியல் மடல்

புதிய அரசியல் திட்டத்தை நிராகரித்து யாழ்நகரில் மே 24ம் நாள் நடைபெறவிருக்கின்ற—தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய சாதனையை விளைவிக்கவிருக்கின்ற—தமிழர் கூட்டணித் தலைவர்கள் கலந்துகொள்ளும் மாபெரும் பொதுக் கூட்டத்தில் பல ஆயிரக்கணக்காக கலந்துகொண்டு தமது உணர்ச்சியை எடுத்துக்காட்டிடுவது தமிழினத்தார் கடமையாகும்!

**என்ன தடை ஏற்படினும்—எத்தனை துன்பம் நேரிட்டாலும் அரசியல் சட்ட எதிர்ப்புக் கூட்டத்தை யாழ்நகரில் நடத்தியே தீருவது என்று தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு முடிவு செய்திருக்கிறது! அந்தக் கூட்டத்திலே புதிய அரசியல் சட்டத்துக்கு பாடைகட்டப்படவிருக்கிறது!**

எனவே நண்பா, புதிய அரசியல் திட்டம் வரும் நாளிலும் அதையடுத்த இரு தினங்களிலும், அமைதியான முறையில் மேற்கண்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஆட்சியாளர்களுக்கு நமது எதிர்ப்புணர்ச்சியை எடுத்துக் காட்டுவோம்!

**நாம் உண்மையில் தமிழர்களாக இருந்தால்—நமது உடலில் ஓடுவது தமிழ்க் குருதியாக இருந்தால்—நம்மைப் பெற்றவள் ஒரு தமிழச்சியாக இருந்தால், இவற்றை நாம் செய்தேயாக வேண்டும்!**

சிங்கள மக்கள் மீது நமக்கு வெறுப்பில்லை—நம்மை அடிமைகளாக்கி அழித்தொழிக்க கொண்டுவரப்படும் புதிய அரசியல் திட்டத்தையே நாம் எதிர்க்கிறோம் என்பதையும் இந்நேரத்தில் தெளிவுபடுத்திக்கூறுகிறோம்!

**தமிழ் ஈழம் எங்கும் மே 22ம் நாளில் சோகம் சூழட்டும்! கருங்கொடிகள் வானளாவப்பறக்கட்டும் பூரண ஹர்த்தால் நடைபெறட்டும்! தமிழினத்தின் விடுதலைக் குரல் ஓங்கி ஒலிக்கட்டும்! புதிய அரசியல் திட்டத்தை தமிழ் தேசிய இனம் ஏற்கவில்லையென்பதை உலகம் உணரட்டும்.**

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

## மே22 ஈழத் தமிழினத்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசியல் திட்டத்தை எதிர்த்து தமிழினம் போராடியே தீரும்!''

### நாவலர்

நாவலர், தளபதி அ. அமிர்தலிங்கம் அவர்கள் பேசும்போது கூறியதாவது:-

இன்றையிலிருந்து தமிழர் மத்தியில் இரண்டேயிரண்டு அணிகள் தாம் உள்ளன. ஒன்று இங்கு உருவாகியுள்ள தமிழர் கூட்டணி. இந்தக் கூட்டணி தமிழர்களின் விடுதலைக்காக போராடும். தமிழர்களின் தன்மானத்தை பிரதிபலிப்பதாக இருக்கும்; மற்றது, ஆளுங்கட்சியின் அடிநக்கி வாழும் ஐந்தாம் படைக் கட்சி!

அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராக மே 22ல் நாம் நடத்தவிருப்பது ஒரு அடையாளப் போராட்டமே. அதிலிருந்து தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டம் தொடரவிருக்கிறது. போராட்டத் திட்டங்களை தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு தயாரித்து தரவிருக்கிறது!

தமிழினம் இந்த நாட்டில் தனக்கென ஒரு சொந்தத் தாயகத்தை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமே விடுதலையடைய முடியும். இங்கு பேசிய திரு. ஆனந்தசங்கரியும் இந்தக் கருத்தை வரவேற்று பேசியது, எதிர்காலத்தில் தமிழ்க் கட்சிகளிடையே ஏற்படவிருக்கும் இலட்சிய ஒற்றுமைக்கு அடிப்படையாக விளங்குகிறது.

புதிய அரசியல் திட்டம் கொண்டுவரப்படும் நாளான மே 22ம் நாளை கரிநாளாக - துக்க நாளாக அனுட்டித்து, நமது வலிமையான எதிர்ப்பை ஆட்சியாளருக்கு தெரியப்படுத்துவது தமிழ் மக்களினது கடமையாகும்.

''காற்று எந்தப்பக்கம் வீசுகிறது என்பதைப்புரிந்து கொண்டு ஆளுங்கட்சியுடன் ஒட்டியிருக்கும் தமிழ் பிரதிநிதிகள் இனியாவது மனம் மாறி அரசியல் சட்டத்தை எதிர்க்கவேண்டும். தமிழ் மக்களின் ஒன்றுபட்ட கருத்துக்குமாறாக நடப்பார்களானால், நிச்சயம் அவர்கள் தமிழினத்தின் — குறிப்பாக தமிழ் வாலிபர்களின் கோபத்துக்கு ஆளாக நேரிடும்.''

### செல்லத்தம்பு

திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு பா. உ. கூறியதாவது:-

''தமிழினம் இந்நாட்டில் வாழ்வதா அழிவதா என்பதை முடிவுசெய்ய வேண்டிய தருணம்வந்துவிட்டது. நாம் மானம்மிக்கவர்கள். மாற்றானின் தாளில் வீழமாட்டோம். எங்கள் சுதந்திரத்துக்காக போராடி உயிரைவிடுவோமே தவிர அடிமைகளாக வாழ ஒருபோதும் ஒருப்படோம். தமிழன் இந்நாட்டில் தமிழரசு அமைத்து தலைநிமிர்ந்து வாழும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

''நமது எதிர்காலப் போராட்டத்தில் முதல் நடவடிக்கையாக இம்மாதம் 22ம் நாள் குடியரசு அரசியல் திட்டத்தை எதிர்த்து ஹர்த்தால் நடத்துவோம்! நமது ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் இதில் அரசாங்கத்துக்குகாட்டுவோம்! தமிழ்த்துரோகிகளுக்கு தகுந்த பாடத்தைப் படிப்பிக்க தங்கத் தமிழ் இளைஞர்கள் தயங்கமாட்டார்கள்.''

### விண்ணப்பப் படிவங்கள் கொழும்பில் கிடைக்கும்

யாழ் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் குடியேற்றத் திட்டங்களில் காணிபெறுவதற்கான விண்ணப்ப படிவங்கள் கொழும்பு தமிழரசுக் கிளையினால் விநியோகிக்கப்படுகின்றன. பி. ப. 5 மணிக்குப்பின், 16, அல்பிறட் அவுஸ் தோட்டம், கொழும்பு-3 எனும் முகவரியில் இப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## கல்வியமைச்சருக்குக் கறுப்புக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பளிக்க 30 இரகசிய பொலிஸ் அதிகாரிகள் சென்றிருந்ததும் தெரிந்ததே!

அமைச்சர் யாழ்ப்பாணம் புறப்படு முன் சகல தமிழ் நாள் ஏடுகளின் ஆசிரியர்களும் அழைக்கப்பட்டு, அமைச்சரது விஜயம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகளில் பூரண விளம்பரம் அளிக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டதாகவும் அச்சுறுத்தப்பட்டதாகவும் தெரிகிறது.

அமைச்சரின் வாழ்க்கை வரலாறு, நிழற்படங்கள் அனைத்தும் பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டனவாம்!

இத்தனை முன்னேற்பாடுகளையும் பூரண பாதுகாப்புக்களையும் செய்த பின்னர்தான், 'கறுப்புக்கொடிகளுக்கு நான் பயந்தவன் அல்ல' என்று வீரப்பிரதாபம் வேறு பேசிவிட்டு அமைச்சர் யாழ்ப்பாணம் புறப்பட்டாரென்று சுட்டிக்காட்டப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் வைத்து அமைச்சரை வரவேற்பதற்கென கம்பளை சாகிராக்கல்லூரியிலிருந்து பல ஆயிரக்கணக்கான மாணவிகளும் மற்றும் பலரும் தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டனர்.

எவ்வளவுதான் பொலீஸ் அதிபர் எச்சரிக்கையும் பயமுறுத்தலும் விடுத்த போதிலும், யாழ் மாவட்டத்தில் அமைச்சர் செல்லவிருந்த இடங்களெங்கணும் சுவர்களிலெல்லாம் எதிர்ப்புச் சுலோகங்கள் கொட்டை எழுத்துக்களில் காணப்பட்டன. 'தரப்படுத்தியவரே திரும்பிப்போ' என்றும், 'இஸ்லாமியர்கள் எங்கள் நண்பர்கள்; பதியுதீன் எங்கள் விரோதி' என்றும் இப்படி பலவாறான எதிர்ப்பு சுலோகங்கள் பல இடங்களிலும் காணப்பட்டன. இவற்றை [illegible] தாம்.

இதே சமயத்தில், காகித உறைகளில் வைத்து அமைச்சருக்கு கறுப்புக் கொடிகளும், எதிர்ப்பு துண்டுப்பிரசுரங்களும் அனுப்பப்பட்டதாகவும் அறியவருகிறது.

பல பாடசாலைகளில் மாணவர்களும் பெற்றோர்களும் அமைச்சர் பேசத்தொடங்கியதும் கூட்டாக வெளியேறி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர் என்று தெரிகிறது.

தெல்லிப்பளைமகாஜனக் கல்லூரியில் மாணவர்கள் கல்வியமைச்சர் நிகழ்ச்சியை முற்றாகப் பகிஷ்கரித்ததால், கல்வியமைச்சர் அங்கு செல்ல முடியாமல் நிகழ்ச்சியை இரத்து செய்துவிட்டு திரும்பியுள்ளார்.

அமைச்சர் விஜயத்தை தமிழரசு பா. உ. க்கள் முற்றாகப் பகிஷ்கரித்ததுடன் யாழ். மாநகராட்சி மன்ற தமிழரசு உறுப்பினர்களும், அமைச்சருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பை பகிஷ்கரித்தனர்.

இத்தனை எதிர்ப்புக்களுக்கும் மத்தியில், பத்திரிகைப் பிரசாரம் அவசரகாலச் சட்டம், பொலீஸ் படைப்பட்டாளத்தின் துணையுடன்தான் யாழ்ப்பாணம் சென்று வீராதிவீரர் போலவும் சூராதிசூரர் போலவும் சென்ற இடமெங்கும் தமிழரசுக் கட்சியை திட்டித் தீர்த்துவிட்டு கொழும்பு திரும்பியுள்ளார் அல் ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்.


உ

சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் பரிதாபி வருடம் வைகாசி மாதம் 9ம் திகதி (22-5-72) திங்கட்கிழமை பகல் 12 மணி முதல் 1-30 மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| திருநிறை செல்வன் கோபாலசிங்கத்திற்கும் (உரிமையாளர் யாழ்ப்பாணம் ஸ்டோர் கண்டி) | திருநிறை செல்வி நிலாம்பிகைக்கும் |

பருத்தித்துறை வியாபாரிமூலை மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறவிருப்பதால் அத்தருணம் எமது சுற்றத்தவர்களையும், நண்பர்களையும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆ. சி. நடராசா- மங்கையர்க்கரசி,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

“எல்லாரும் இன்புற்றிருக்கவென்றெண்ணுவதே அல்லாமல்மற்றொன்றும் அறியேன் பராபரமே.''

—தாயுமானவர்.

நாடு நலம் பெற, நாம் நற்சேவை செய்ய, எமது உற்பத்திப் பொருள்களை வாங்கி உபயோகியுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

**த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 22 - ஈழத் தமிழினத்துக்குத் துக்க நாள்!

## கடைகளைப் பூட்டிக் கறுப்புக் கொடியேற்றி பூரணஹர்த்தாலை அன்று அனுட்டிப்போம்!

**"புதிய அரசியல் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் நாளான மே 22ம் நாள் இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு துக்கநாள். தமிழ்இனத்தை அடிமைகளாக்கி, அழித்தொழிக்கும் ஒரு சட்டம் புதிய அரசியல் சட்டம். இந்தச் சட்டத்தை இந்நாட்டுத் தமிழர்கள் எக்காலத்திலுமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இச்சட்டத்தை எதிர்க்கவேண்டியது தமிழ் மக்களின் தவிர்க்க முடியாத கடமை. எனவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இத்தினத்தில் பரிபூரண ஹர்த்தால் அனுட்டிக்கும்படியும், வீடுகளிலும், கட்டிடங்களிலும் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு துக்கம் கொண்டாடுமாறும் தமிழர் கூட்டணியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறேன்.**

—இவ்வாறு தமிழரசுத் தந்தை செல்வா அவர்கள் 14-5-72 மாலை திருகோணமலை நகர சபை மண்டபத்தில் தமிழர் கூட்டணியின் சார்பில் நடைபெற்ற முதலாவது பொதுக் கூட்டத்துக்கு தலைமை தாங்கிப் பேசியபோது கூடியிருந்த மக்களின் கரகோஷ ஆரவாரத்திடையே ஈழத்தமிழினத்துக்குவேண்டுகோள் விடுத்தார்.



கூட்டத்துக்கு ஒலிபெருக்கி உபயோகிக்க பொலீசார் அனுமதியளிக்க மறுத்த போதிலும், மக்கள் கூட்டம் மண்டபத்தின் உள்ளும் புறமும் நிரம்பிவழிந்து காணப்பட்டது. தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம், இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி வவுனியா முன்னாள் பா. உ. திரு. எம். சிவசிதம்பரம், கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரி ஆகியோரும் இதில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

தந்தைசெல்வா அவர்கள் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

''இதுவரை இருந்து வந்த சோல்பரி அரசியல் சட்டத்திலும் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தாலும், அதிலுள்ள 29வது சரத்து ஓரளவுக்கு எமக்கு பாதுகாப்பளிப்பதாக இருந்துவந்தது. தமிழருக்கு விரோதமாக சட்டங்கள் இயற்ற முடியாதபடி அந்த 29வது சரத்து ஒரு தடையாக இருந்து வந்திருக்கிறது. தமிழருக்கு ஓரளவு பாதுகாப்பு அளிக்கும் பலமற்ற அந்த ஒரு பிடியையும் கூட இல்லாமற் செய்வதற்கே புதிய அரசியல் சட்டம் கொண்டு வரப்படுகிறது: எதிர்காலத்தில் தமிழருக்கு விரோதமாக இன்னும் பல அநீதியான சட்டங்களை சிங்கள அரசு கேட்டுக்கேள்வியின்றி இயற்ற புதிய அரசியல் சட்டம் வாய்ப்பளிக்கிறது.

''புதிய அரசியல் சட்டத்தின் கீழ், சிங்களம் மட்டும் சட்டம் அரசியல் சட்ட அந்தஸ்தைப் பெறுகிறது. ஆனால், தமிழ்மொழிக்கு எவ்வித பாதுகாப்பும் உரிமையும் இல்லை. இருந்து வந்த 1966ம் ஆண்டின் தமிழ்மொழி விசேட விதிகள், சட்டமும் செல்லுபடியாகாது என்று கூறப்பட்டுவிட்டது.

எங்கள் தமிழ்ப்பகுதி நீதிமன்றங்களில் தமிழை நிர்வாகமொழியாக்கக்கூட சிங்களவர்கள் விரும்பவில்லை. அங்கும் நீதிமன்றங்களின் பதிவு மொழியாக சிங்களத்தையே வைத்திருக்கிறார்கள். நாடு முழுவதற்கும் சிங்களத்தை நீதிமன்ற மொழியாக அரசியல் சட்டத்தில் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள்.

ஏனைய மதத்தவர்களின் வரிப்பணத்தில் பௌத்த மதத்தை பாதுகாக்கவும் பேணிவளர்க்கவும் போகிறார்கள். பௌத்தத்துக்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். இது ஏனைய மதங்களை பாரபட்சமாக நடத்துவதாகும்.

இப்படி தமிழ் மக்களின் மொழி, இன, மத உரிமைகள் அனைத்தையும் மறுத்து, தமிழ் மக்களை அடிமைக் குழியில் தள்ளிவிழ்த்துகின்ற சட்டமாக புதிய அரசியல் சட்டம் இருக்கிறது. இந்த அரசியல் சட்டம் கொண்டு வரப்படும் நாள் தமிழ் மக்

## தமிழ் மாணவர்கள் மூன்று நாட்களுக்கும் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்க வேண்டும்!

களுக்கு ஒரு பெரிய துக்க நாளாகும்.

அரசாங்கம் குடியரசு விழாக்களைக் கொண்டாடி மகிழும் அதே நேரத்தில், புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக தமிழ் மக்கள் உரத்துக் குரலெழுப்ப வேண்டும். எதிர்ப்பை பெரிய அளவில் காட்டவேண்டும். அவசரகாலச்சட்டம் இருப்பதால், நாம் அடங்கியொடுங்கி நமது உணர்ச்சியை வெளிக்காட்டாமல் இருக்க முடியுமா?

எனவே தமிழ் மக்கள், குடியரசு கொண்டு வரப்படும் மே 22ம் நாள், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே ஒரு பரிபூரண ஹர்த்தால் போடவேண்டும். வீடுகளிலும், மற்றும் கட்டிடங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டு துக்கம் கொண்டாடவேண்டும். அரசாங்க வாகனங்களில் அன்றைய தினம் ஏறக்கூடாது. தனியார் துறையில் வேலை பார்ப்பவர்கள் அன்று வேலைக்கு போகக் கூடாது. தங்கள் தங்கள் வீடுகளில் அமைதியாக இருந்து எமது இலட்சியம் வெற்றிபெற வேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டும்.

வழக்கறிஞர்கள் அன்றைய தினம் கோர்ட்டுக்குப் போகக்கூடாது. மாணவர்கள் 22, 23, 24 ஆகிய மூன்று தினங்களும் பாடசாலைகளுக்கு போகாது பகிஷ்கரிக்கவேண்டும். பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் குடியரசு நாளையொட்டி அரசாங்கம் நடத்தும் கொண்டாட்டங்களில் பொது மக்களும் மாணவர்களும் கலந்துகொள்ளக் கூடாது.

24ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவிருக்கும் அரசியல் சட்ட எதிர்ப்புக் கூட்டத்தில் மக்கள் திரளாக கலந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு எந்தெந்த முறைகளில் முடியுமோ, அந்தந்த முறைகளில் எல்லாம் அரசியல் சட்டத்துக்கு எதிராக நாம் பெரிய எதிர்ப்பை காட்டவேண்டும்.

### கதிரவேற்பிள்ளை

தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. பேசும் போது கூறியதாவது:—

வடக்கு, கிழக்கு, மலையகம்—மூன்றும் இன்று ஒன்றிணைந்து தமிழ் மக்களின் உரிமைக்குப் போராடத் தயாராகிவிட்டதை இன்றைய கூட்டம் எடுத்துக் காட்டிவிட்டது. புதிய அரசியல் சட்டம், தமிழ் மக்களின் மொழியுரிமை குடியுரிமை, கல்வியுரிமை போன்ற சகல உரிமைகளையும் முற்றாக மறுக்கின்ற ஒரு அரசியல் சட்டமாகும். மக்களின் மறுக்க முடியாத அடிப்படை உரிமைகளைக் கூட இந்த அரசியல் திட்டத்தில் வரைய முடியாது என்று மறுத்து விட்டார்கள் இச்சட்டத்தை தயாரித்தவர்கள்.

புதிய அரசியல் சட்டம் தம்மீது திணிக்கப்படுவதை எதிர்க்கவேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனினதும் கடமையாகும். புதிய அரசியல் சட்டத்துக்கு எதிரான தமிழ் மக்களின் ஒரு முகப்படுத்தப்பட்ட உணர்ச்சியை பிரதிபலிக்கும் வகையில் தமிழரசுக்கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும், இலங்கை தொழிலாளர் காங்கிரசும் கூட்டாக

## தமிழர் கூட்டணிக் கூட்டத்தில் தலைவர்களின் எழுச்சிமிக்க உரைகள்!

இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளதை தமிழினம் வரவேற்கும் என்பதில் தடையில்லை. ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணித் தலைவர் திரு. சுந்தரலிங்கம், கல்குடா பா. உ. திரு. தேவநாயகம் போன்றோரும் அரசியல் சட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஆதரவு நல்கி தந்தி அனுப்பியுள்ளனர்.

எனவே புதிய அரசியல் திட்டத்தை தமிழ் மக்கள் இன்று ஒரே குரலில் எதிர்க்கிறார்கள். இதை அரசு உணரவேண்டும். புதிய அரசியல் திட்டம் நம்மீது திணிக்கப்படும் தினத்தன்று பரிபூரண ஹர்த்தாலையும், துக்க தினத்தையும் நாம் தமிழ் இலங்கையில் அனுட்டிக்க வேண்டும்.

முக்கியமாகபாடசாலைக்கு பிள்ளைகள் 22, 23, 24 ஆகிய மூன்று நாட்களிலும் போகக்கூடாது. இளம் மனத்திலேயே சுதந்திர உணர்வு ஏற்படவேண்டும். காந்தி அடிகள் கூறியது போல, அடங்காதவர்களாக, கட்டுப்பாடில்லாதவர்களாக நமது மாணவர்கள் இருந்தாலும் இருக்கலாம்; ஆனால் அடிமைகளாக, சுதந்திர உணர்வற்றவர்களாக அவர்கள் இருக்கக் கூடாது.''

எனவே மாணவர்கள் பாடசாலைகளை மூன்று நாட்களுக்கும் முற்றாக பகிஷ்கரிக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலைகட்கு அனுப்பக் கூடாது.''

### செல்லச்சாமி முழக்கம்!

இ. தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி பேசுகையில் கூறியதாவது:-

''புதிய அரசியல் சட்டத்தை எதிர்ப்பதிலே மலையகத் தமிழர்களும், வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களுடன் இணைந்து நிற்கிறார்கள் என்பதை இந்தக் கூட்டத்தில் நான் பேசுவதிலிருந்தே புரிந்துகொண்டிருப்பீர்கள்.

புதிய அரசியல் திட்டம் குடியுரிமையை வரையறை செய்யத் தவறிவிட்டது. இந்நாட்டுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் — இந்நாட்டுக்கு தேவையான அந்நிய செலவாணியில் 89 வீதத்தை தந்துகொண்டிருக்கும் மலையகத் தமிழர்களை தொடர்ந்தும் நாடற்றவராக வைத்திருக்கவும் பதிவும் பிரஜைகளின் பிரஜா உரிமைகளை இரத்துச் செய்யவுமே புதிய அரசியல் சட்டம் வழிவகுக்கிறது. அரை குறையாக வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகள் கூட மலையகத் தமிழனுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. நமது இனத்தின் குடியுரிமை, மொழியுரிமை, மதவுரிமை, கல்வியுரிமை சகல உரிமைகளையுமே புதிய அரசியல் திட்டம் பறித்துவிட்டது.

புதிய அரசியல் திட்டத்துக்கு எதிராக நடத்தப்படும் எந்தப் போராட்டத்திலும் மலையகமும் நிச்சயம் தோள் கொடுக்கும் என்கின்ற உறுதி மொழியை இச்சமயத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.''

### ஆனந்தசங்கரி பேச்சு!

திரு. வி. ஆனந்தசங்கரி பா. உ. பேசும்போது கூறியதாவது:—

''ஐக்கிய இலங்கைக்காகவும் ஒற்றையாட்சிக்காக [illegible] தமிழ் காங்கிரஸ் பாடுபட்டது. அதில் தோல்வியே கண்டது. இணைப்பாட்சிக்காக தமிழரசுக் கட்சி போராடியது — அதையும் தர சிங்களவர்கள் மறுத்துவிட்டார்கள். இந்நிலையில் தமிழரசுக் கட்சியினரும் நாமும் ஒன்றாக மீண்டும் கூடியிருக்கிறோம். எமக்கு எதிரே தெரியும் மூன்றாவது வழி என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த மூன்றாவது வழியில் — அதையே இலட்சியமாகக் கொண்டு அதற்காக தமிழர் போராட வேண்டும். அந்தப் போராட்டத்தின் தொடக்கமே குடியரசு எதிர்ப்பு ஹர்த்தால்.

''இங்கு நியமிக்கப் பட்டிருக்கும் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு எடுக்கும் முடிவுகளுக்கமைய நடப்பேன் என்று உங்களுக்கு உறுதியளிக்கின்றேன்.''

### தா. சிவசிதம்பரம்

வவுனியா முன்னாள் பா. உ. திரு. தா. சிவசிதம்பரம் கூறியதாவது:-

''தமிழ் மக்கள் இந்த நாட்டில் சிங்களக் கட்சிகளை பல தடவைகளில் நம்பி நம்பி ஏமாந்துவிட்டனர்— இல்லை, ஏமாற்றப்பட்டுவிட்டனர். எத்தனையோ, உடன்படிக்கைகள், ஒப்பந்தங்களை எழுதியும், சிங்களக் கட்சிகள் அவற்றை நிறைவேற்றத்தவறிவிட்டன. இனி யாரையும் நம்பிப் பிரயோசனமில்லை. நாம் போராடி நமது விடுதலையை நிலைநாட்டவேண்டும் என்ற முடிவுக்கு தள்ளப்பட்டுவிட்டோம். ஆளுங்கட்சியுடன் இன்று ஒட்டியிருக்கும் ஒரு சிலரும் விரைவில் இந்த முடிவுக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டே தீரும்.

''புதிய அரசியல் திட்டத்துக்கு சார்பாக எந்த ஒரு தமிழ்ப் பிரதிநிதியும் கையெழுத்திடாது, எப்பாடு பட்டாகிலும் தடுத்தேயாக வேண்டும்.''

### மு. சிவசிதம்பரம்

உடுப்பிட்டி முன்னாள் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:-

''புதிய அரசியல் திட்டத்தில் தமிழுக்கு உரிமைதரப்பட்டிருக்கிறதாக கூறப்படுவது வெறும் கண்துடைப்பாகும். 1958ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள்சட்டம், வெறும் உயிரற்ற சடலம். அந்த சடலத்துக்கு உயிராக இருந்தது, 1966ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி விதிகளாகும். இந்த விதிகள் அரசியல் சட்டத்தில் இடம்பெறாதென்றும்' சட்ட விரோதமானவையென்றும், அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வாவே பகிரங்கமாக கூறிவிட்டார். இனியுமா தமிழர் ஏமாற வேண்டும்?

நீதிமன்றமொழி விஷயத்திலும், தமிழுக்கு உரிமை தரப்படும் என்றல்ல—வேறு ஏற்பாடு செய்யப்படும் என்றே கூறப்பட்டிருக்கிறது. 'வேறு ஏற்பாடு' என்பதற்கு பொருள் தமிழ் தான் என்று எப்படி ஏற்றுக்கொள்வது? ஆங்கிலத்தையும் வைத்திருக்கலாமல்லவா? எனவே தமிழ் மக்களை யாரும் ஏமாற்றமுடியாது.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(14)

## தஞ்சைத் தரணியிலும் தமிழ் பரப்பும் சுதந்திரன்



# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

தமிழர்களின் வரலாற்றிலே 'பொற்காலம்' என்று ஒருகாலம் இருந்திருக்குமானல், அது சோழப் பேரரசு கொடிகட்டிப் பறந்த காலம் என்றே குறிப்பிடவேண்டும். 'சோழநாடு சோறுடைத்து' என்கின்ற கூற்று, எத்துணை தூரம் உண்மையானதென்பதை சோழ நாட்டைச் சுற்றுப்பார்க்கும்போது தான் நம்மால் உணர முடிந்தது.

ஆம், எங்குபார்க்கினும் பச்சைப்பசேலென்றகாட்சி! காவிரித் தாயின் மடியிலே செழுமை மிகுந்து காட்சி தரும் சோழநாடு பார்ப்போர் உள்ளங்களையெல்லாம் நிச்சயம் கவரவே செய்யும்! சோழநாட்டுக்கு 'புனல்நாடு' என்கின்ற ஒரு பெயரும் இதனுலேயே ஏற்பட்டது போலும்! ஔவை மூதாட்டியும் 'மண்ணுவதும் சோழமண்டலமே' என்று சோழ நாட்டையே சிறப்பித்துப் பாடியுள்ளார்!

இந்தச் சோழவள நாட்டின் சுந்தரத் தலைநகராக விளங்குவதுதான் தஞ்சை! வற்றாத ஆறும், வளம் கொழிக்கும் வயல்களும் தஞ்சையின் சிறப்புக்கு காரணமாக அமைந்துள்ளன வான்பொய்த்தாலும் தான் பொய்யாக்காவிரி தஞ்சைத் தரணியில் விரிந்து பரந்து ஓடுகிறது!

'தஞ்சையிலே ஒழுங்கான சாலைகள், சாலையின் இருமருங்களிலும் வரிசை வரிசையாகத் தென்னை மரங்கள் ஊருக்குள் நுழைந்தால் அழகான வீடுகள், கலையின் நிலை காட்டும் கோவில்கள், வாய்க்கால்கள், வயல் வரப்புக்கள்......' இப்படியாக ஊர்க்காட்சி இருந்தது என்று 18ம் நூற்றுண்டு வரலாற்ருசிரியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆம், தஞ்சை தமிழ்ப் பேரரசின் இராசதானியாக இருந்த மண் அல்லவா? அந்த நிலத்தில் மிதித்ததுமே, என்னையறியாமலே என்னுடல் புல்லரித்தது!

தமிழன் நினைத்தால் ஒரு சாம்ராச்சியத்தையே உருவாக்கமுடியும் என்கின்ற நம்பிக்கையை இன்றும் நமக்கு தந்துகொண்டிருப்பவன் சோழப் பேரரசன் இராசஇராசன்! அவன் இருந்து ஆண்ட மண் அல்லவா தஞ்சை!

**கோவை-மகேசன்**

தமிழர்களின் வீரத்திற்கும், வேளாண்மைக்கும், கலையார்வத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருப்பது தஞ்சை மாநகரம்! தஞ்சை மாவட்டத்துக்குள் சுற்றிப்பார்க்கும்போது, ஆங்காங்கே சிதைந்தும், உடைந்தும் பழுதுபட்டும் கிடக்கும் சிற்பங்களைக் காணுகிறோம்!

தஞ்சையின் வீதிகளிலே அன்று எத்தனை குதிரைகளின் குளம் பொலியும், அதில் இவர்ந்துசெல்லும் சோழ நாட்டு வீரர்களின் போர்க்குரலும், சிற்பிகளின் உளிச்சத்தமும், தமிழ் புலவர்களின் பாடல்களும், கேட்டிருக்கும்! ஆடலமகளிரின் ஆடல்களும், விறலியரின் இசைப் பாடல்களும் எத்துணை இனிமையைக் கொடுத்திருக்கும்! ஆடலும், பாடலும், இசையும் கூத்தும், சிற்பமும் கலையும், காதலும் வீரமுமாக, இருந்த அன்றைய தஞ்சையை எண்ணிப்பார்த்திடும் போது, எவ்வளவு தூரம் நம் இதயம் புல்லரிக்கிறது!

இராசராசனும், இராசேந்திரனும், கரிகால் பெருவளத்தானும் குலோத்துங்கனும் உலவிய மண் அல்லவா தஞ்சை மண்! சோழப் பேரரசிகளான செம்பியன் மாதேவியாரும் வானவன் மாதேவியாரும் குந்தவைப் பிராட்டியாரும், [illegible]த்திருந்த மண் அல்லவா தஞ்சை மண்! இந்த நினைவுகளுடன் தஞ்சையில் உலாவும்போது, முடிந்துபோன அந்தப் பழைய காலத்தில் நாமும் வாழ்ந்திருக்கக்கூடாதா என்ற ஏக்கப் பெருமூச்சு எனக்கு ஏற்பட்டது!

தஞ்சையை தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழ மன்னர்களில் மிகவும் புகழ் பெற்றவன் முதலாம் இராசஇராசன்! இவனுக்கு சிலையெடுக்கும் பிரச்சினையில் தான், டெல்லி மத்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்குமிடையே அண்மையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதென்பதை வாசக நேயர்கள் அறிவார்கள்.

இராசஇராச சோழன் தான் தமிழரின் கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் தஞ்சை பிரகதீசுவரர் ஆலயத்தை கி.பி. 1009ல் கட்டிமுடித்தவன். ஈழத்தையும் இன்னும் பல நாடுகளையும் வென்றி கொண்டு தமிழர் சாம்ராச்சியத்தை கட்டியெழுப்பியவனும் இவனே. இராசேந்திர சோழன், ஈழத்தை வென்று ஈழமன்னன் ஐந்தாம் மகிந்தனை சிறைப்படுத்தி சோழநாட்டுக்கு அனுப்பியவன். தென்னகத்தில் பாண்டியரையும் சேரரையும் வென்றவன். தஞ்சையை தலைநகராகக் கொண்டு தமிழ்நாடு முழுவதுக்கும், ஈழத்துக்கும் மன்னனுக திகழ்ந்தவன். கங்கை கொண்ட சோழன் என்று புகழ் எடுத்தவன்.

இப்படிப்பட்ட பெருமன்னர்கள் ஆண்ட பூமியிலே நின்றுகொண்டு, பழைய வீரமிக்க தமிழர் வரலாறுகளை எண்ணிப்பார்த்தபோது ஒருபக்கம் பெருமையும், மறுபக்கம் இன்றைய தமிழ் இனத்தின்மீது கோபமுமாக வந்தது!

● அன்று தமிழ் மன்னர்கள் தங்கள் ஆதிக்கத்துக்குள் வைத்திருந்த நாடுகளையெல்லாம் இன்றைய தமிழர்கள் இழந்து பறிகொடுத்து — தமக்கென சொந்தமாக ஒரு நாடுகூட இன்றி அனுதைகளாக, அடிமைகளாக தவித்திடுவதை நினைக்கும் போது, இந்தத் தமிழ் சாதியைக் கண்டு ஆத்திரமும் கோபமும் வராமல் வேறு என்னவரும்?

ஆனுலும், தமிழர்களுக்கு தனிப் பேரரசுகண்ட இராசஇராச சோழன் பிறந்த அதே தஞ்சை மண்ணில் பிறந்த டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ் நாட்டின் முதல்வராக இருப்பதை எண்ணி மனம் சற்று [illegible]தும், தமிழ் மக்களின் இன்றைய இராசஇராசன் கலைஞர் கருணாநிதிதான் என்னுகூடத் தமிழர்கள் பலர் கருதுவதை நான்அறிவேன்.

கலைஞர் கருணாநிதி மட்டுமல்ல — தமிழின் பெருமையை உலகுக்கு உணர்த்த முயன்ற முப்பெரும் புலவர்களான உ.வே. சாமிநாதையர், திரு. வி. க. மறைமலையடிகள் ஆகியோர் பிறந்ததும் தஞ்சைத் தரணியில் தான்!

தெய்வமணம் பரப்பும் திருக்கோவில்கள் தஞ்சையில் ஏராளம் ஏராளம்! இங்குள்ள இராச இராசேச்சுரமும் மற்றும் 77 திருக்கோவில்களும் சோழர் காலச் சிற்பத் திறனை இன்றும் எடுத்துக்காட்டிக்கொண்டிருக்கின்றன. ஆம், தஞ்சை முழுவதுமே ஒரு கலைக்கோவிலதான்! தஞ்சை பெரிய கோவிலில் இருக்கும் பிரமாண்டமான நந்தியை பார்த்துவிட்டு, ''இந்த நந்தியைச் செய்ய எவ்வளவு இரும்பு செலவாகியிருக்கும்? என்று கேட்டாராம் ஒரு ஆங்கிலேயர் — 'இரும்பு அல்ல — கல்' என்று சொன்னதும் அவர் ஆச்சரியப்பட்டாராம்! இதை அக்கோவில் அதிகாரி ஒருவர் என்னிடம் கூறினுர். மலையே இல்லாத தஞ்சையில் முழுக்க முழுக்க கருங் கல்லிலே ஒரு கலைக் கோவில் கட்டுவிப்பது என்றல் அது இராச இராசன் போன்ற திறமையாளர்களால் அன்றி வேறு எவரால் முடியும்? கோபுரத்தில் நிறைந்து கிடக்கும் சிற்பங்களின் அழகை பார்க்க பல நாட்களும் பல கண்களும் வேண்டும்!

தஞ்சை மாவட்டம் கலையழகு மிக்க பொருள்களுக்கு பெயர் பெற்று விளங்குகிறது. அவைகளில் மிக முக்கியமானவை, தஞ்சாவூர் வீணை, தஞ்சாவூர் தட்டு, ஏலக்காய்மாலை, கிராம்பு மாலை, நெல்மாலை, நெட்டி வேலை, கண்ணாடிப் பல்லக்கு, முத்து விமானம், தலையாட்டி பொம்மை, அழகு மிகு விக்கிரகங்கள், கண்ணாடியில் சித்திர வேலை, தென்னங்கீற்றுப் பந்தல்கள் ஆகியவையாகும்!

தஞ்சையில் நாம் பார்க்க வேண்டிய முக்கிய இடங்களில் ஒன்று தஞ்சை அரண்மனையாகும்! சரபோஜி மன்னர் காலத்து அரண்மனை அழகிய கலைக்கூடமாக இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தஞ்சையிலுள்ள சரஸ்வதி மகால் ஒரு சிறந்த கலைக் கூடமாகும். 'பண்டைத் தமிழரின பண்பாட்டை மக்களின்று கண்டறிய வந்த கலைக்கூடம்' என்று இதை கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை பாராட்டுகிருர். இக்கலைக் கூடத்தில் தமிழர்களின் கலைத்திறனை எடுத்து விளக்கும் மிகப் பழைய சிற்பங்களையும் பஞ்ச உலோகங்களாலான உருவச் சிலைகளையும் கண்டு மகிழலாம்.

சரஸ்வதிமகால் நூல் நிலையத்திற்கு சென்று பார்த்தேன். அங்கு பல்வேறுநூல்களும் பத்திரிகைகளும் இருக்கக்கண்டேன். அவற்றுள் நமது ஈழத்துப்பத்திரிகை ஒன்றும் இருக்கக் கண்டேன். அது எது என்கிறீர்களா? நமது சுதந்திரன்தான்! ஆம், தஞ்சைத் தரணியிலும் தமிழ் பரப்பி வருவது உங்கள் சிந்தை கவர்ந்த சுதந்திரன்.

சுதந்திரனைக் கண்டவுடன் ஈழத்து அரசியல் நினைவுகள் எம் நெஞ்சில் அலை மோதுகிறது. தந்தை செல்வாவுடன் சென்னை புறப்பட வேண்டிய நேரமும் நெருங்கிவிட்டதை உணர்கிறேன்.

**வளரும்**

## சிங்களப் படிப்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களத்தை கற்பதில்லை என்ற திடசங்கற்பத்தோடு வாழ்ந்தால் நாம் நிச்சயமாக முன்னேறமுடியும். மாற்றானின் கால்களை நக்கி அவனை மண்டியிட்டு மொழியை, இனத்தை விற்று வாழ்வதா இல்லை சாவு வரினும் தன்மானத்தோடு ஏற்பதா என்பதை ஒவ்வொரு தமிழனும் சிந்திக்கவேண்டும்.

அதிகாரம் ஆணவம் படைப்பலம் பணபலம் எல்லாம்கொண்ட வெள்ளையர்களை நிராயுத பணியாக நின்று வெள்ளையனே வெளியேறு என்று பாரதம் வெளியேற்றவில்லையா? எமக்கு துணிவு இருந்தால் எதையும் சாதிக்கமுடியும் அண்டிப் பிழைக்க நினைத்தால்... அதோ கதிதான்.

இன்றைய இளைஞர்களின் கரங்களில் மலரவிருக்கும் தமிழினத்தின் எதிர்காலம் எத்தகையதாக இருக்குமோ என்று ஏக்கம் கொள்ளும் பெறரேர் பலர் இருக்கின்றனர். நாளைய சமூகம் நல்ல நிலையை அடைய இன்றைய தியாகம் கட்டாயம் ஏற்படத்தான் வேண்டும்.

இயேசுநாதரை காட்டிக் கொடுத்த யூதாஸ், கட்டபொம்மனை காட்டிக் கொடுத்த எட்டப்பன், சங்கிலியனை காட்டிக்கொடுத்த காக்கைவன்னியன் கடைசியில் எந்த நிலை அடைந்தார்களோ அதே நிலை இன்று வயிறு பெரிதென நினைக்கும் துரோகிகளுக்கு நாளை ஈழத் தமிழகத்தில் தமிழரசு ஏற்படும் போது கட்டாயம் ஏற்பட்டே தீரும்.

## ...மும்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழியினுள் புகுத்தியும் வருவார்களேயானல் அதி விரைவில் ஈழவள நாட்டில் தமிழர் என்ருெரு இனம் இருந்த சுவடே இல்லாமற் போய்விடும்.

தமிழ்மொழி தனித், தமிழாகவே விளங்கத் தமிழ் ஊர்கள் தமிழருடைய ஊர்களாகவேயிருக்க, "தமிழர் தன்னாட்சி பெற, தமிழ் ஆட்சி மொழியாக, தமிழர் தமிழிலேயே பணியாற்ற, விடுதலைத் தாகங் கொண்டு தம் இன்னுயிர்களைப் பயணம் வைத்துப் பணிபுரியும் தன்மானத் தமிழரின் சுதந்திர தாகம் தணிய "என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்."

## திரண்டனர் தமிழர், திருக்கோணமலையில்!

(திருக்கோணமலைக் கவிராயர்)

வீரம் நிறைந்து விழைந்திடும் மண்ணும்
தீரர்கள் மலிந்த திருக் கோணமலையில்
•பாரார் வியக்கப் பைந்தமிழ்க் காவலர்
ஓரணி திரண்டவர், ஓர்மையோ டெழுந்தனர்
பேரார்வத்தின் பெரும்படை எழுந்தது!
பெண்டுகள் குரவையில் அண்டமே யதிர்ந்தது
வாரீர் என்கிருர் வண்டமிழ்த் தலைவர்கள்!
தாரீர் என்கிருன் தளபதிப் புலவன்!!

அமரர்கள் வானத், தழுத கண்ணீரால்
சமரர்கள் நிறைந்த மண்டபம் நனைந்தது
குமரர்கள், பெரியோர், குமரிகள், தாய்மார்
தமதரும் பணியினைத் தருகுவீர் என்றனர்

செல்வா எழுந்தார், சேதியைச் சொன்னுர்
பல்வேறு தலைவரும் பாமாலை சூடினர்
எல்லோர் உளத்தும் எழுச்சி பிறந்தது
எங்கணும் விடுதலை வேட்கை எழுந்தது

புத்தனைப் போற்றும் பூமியில், தமிழர்
செத்துத் தொலைதலைச் செகமே நீ பார்!
உத்தரிக்கின்ருேம், உழல்கின்ருேம்—உரிமை
இத்தினியும் இலை இன்னு மா பொறுமை?!!

வரம்பினை மிஞ்சிய வம்பரை, எங்கள்
பரம் பரைத் தமிழர் பந்தாய் ஆடினுர்
நரம்பினி லோடும் நற்றமிழ் ரத்தம்
சுரம்பாடுகையில் சுதந்திரம் பிறக்கும்

திரண்டனர் தமிழர், மருண்டனர் பகைவர்
பறந்தன நகரில் பைந்தமிழ்க் கொடிகள்
அரும்தமிழ் அன்னை சுதந்திரம் பெறும் நாள்
விருந்து நாள் வீரத் திராவிடர் திருநாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


24ம் திகதி முதல்
கெயிட்டி
விலாசினி

கே. ஆர். விஜயா
ரவிச்சந்திரன்
நாகேஷ்
S. V. சகஸ்ரநாமம்
— நடித்த —

சபதம்



6வது வாரம்
செல்லமகால்

நாகேஷ்
ஜெமினி கணேசன்,
ராஜ்ஸ்ரீ,
பேபிராஜி
நடித்த




பத்தாம் பசலி

சிலோன் என்டடெயின்ஸ்மென்ட்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கிறது

8வது வாரம் சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

சிவாஜிகணேசன், ரங்கராவ்,
ஜெயலலிதா, நாகையா,
பாலாஜி, ராகவன்,
சந்திரபாபு, பண்டரிபாய்,
சுந்தரராஜன், மனோகர்,

நடிக்கும்
சுஜாத்தாவின் ராஜா (ஈஸ்ட்மென் கலர்)



4வது வாரம் கிங்ஸ்லி (கொழும்பு)



ஜெய்சங்கர் மனோகர் பாரதி
—நடித்த—
நான்கு கில்லாடிகள்

6வது வெற்றி வாரம்
கெப்பிட்டல் (கொழும்பு) - பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்நகர்)

சிவாஜி, லட்சுமி, முத்துராமன்,
நாகேஷ், குமாரி சச்சு, நம்பியார்
—நடித்த—

தங்கைக்காக


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194ஏ, இலக்கத்தில் 1972-ம் வருடம் மே மாதம் 21-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org